நூலகம்


வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

# ஈழநாடு வார மலர்

Eelanadu

விலை ரூ. 30/=








Email : news@eelanadu.lk மலர் : 07 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 341 பக்கங்கள் : 16


## டித்வா சூறாவளி தாக்கம் குறித்து முன்னரே அறிவித்ததா இந்தியா?

புதுடில்லி, டிசெ. 07

இலங்கையை தாக்கிய டித்வா சூறாவளி குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் ஏலவே இலங்கை அதிகாரிகளுக்கு தெரிவித்ததாக இந்தியன் எக்ஸ்பிரஸ் இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் பணிப்பாளர் நாயகத்தை மேற்கோள் காட்டி, நவம்பர் 20 ஆம் திகதி சூறாவளி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு குறித்து, இந்திய வானிலை ஆய்வு மையம் கடந்த நவம்பர் 13 ஆம் திகதி எச்சரிக்கை விடுத்ததாக அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

15

## இலங்கை மீண்டெழும் திட்டம் இராஜதந்திரிகளுக்கு விளக்கம்!

கொழும்பு, டிசெ. 07

தித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரிடர்களில் இருந்து மீண்டு வருவதற்குரிய தேசிய மீட்சி மற்றும் மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர்பில் இராஜதந்திர சமூகத்துக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத்

15

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுக்க விரைவில் விசேட 'ஒப்பரேசன்'!

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 07

"வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு இந்தியா ஒரு புறத்தில் மனிதாபிமான உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் மறுபுறத்தில் இந்திய மீனவர்கள் இந்த இடர் நெருக்கடியையும் கருத்தில் கொள்ளாமல் எமது கடற்பகுதிக்குள் அத்துமீறி எங்கள் கடல் வளங்களை அள்ளிச் செல்கிறார்கள். இது நியாயமற்றதொன்றாகும். எனவே இந்திய மீனவர் அத்துமீறலைக் கட்டுப்படுத்த எமது மீனவர்களும் அமைச்சும் இணைந்து விசேட 'ஒப்பரேசன்' ஒன்று முன்னெடுக்கப்படும்."

-இவ்வாறு தெரிவித்தார் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்.

டான் தொலைக்காட்சியில் பிரதி ஞாயிறு தோறும் ஒளிபரப்பாகும் 'ஸ்பொட்லைட்' நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஒரு பெரும் வெள்ள அனர்த்தம் நிகழ்ந்திருக்கிறது. இந்த அனர்த்தத்தால் எமது மீனவர்களும் மோசமாக பாதிக்கப்பட்டிருகின்றார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா ஒரு புறம் மனிதாபிமான உதவிகளை வழங்கிக்கொண்டிருக்கின்றது. அது எமக்கு ஆறுதலைத் தருகிறது.

ஆனால் மறுபுறத்தில்

15



## இலங்கைக்கு 950 தொன் நிவாரணம் கப்பலில் அனுப்பியது தமிழக அரசு!

### முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நிகழ்வு

சென்னை. டிசெ. 07

தமிழக அரசு சார்பில் இலங்கைக்கு சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் இருந்து கப்பல் மூலம் 950 தொன் நிவாரணப் பொரு ட்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

15



## இலங்கை மக்களுக்காக பிரிட்டன் வழங்கும் மனிதாபிமான உதவித் தொகை அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 07

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, பிரித்தானிய அரசாங்கம் வழங்கும் மனிதாபிமான உதவித்தொகை ஒரு மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகள் வரை அதிகரிக்கப்பட் டுள்ளது.

இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதரகம், இதற்கு முன்னர் 675,000 ஸ்ரேலிங் பவுண்டுகள் மனிதாபிமான உதவியை வழங்குவதாக அறிவித்திருந்த நிலையில் தற்போது அந்த மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரித்தானியாவால் வழங்கப்பட்ட அவசர அனர்த்த நிவாரணங்கள், அனர்த்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஏற்கனவே விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(அ)

## டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மன்னார் மீனவர்கள் நிர்க்கதி!

மன்னார், டிசெ. 07

டித்வா புயலினால் மன்னார் மாவட்ட மீனவர்களும் பாரிய பாதிப்பை எதிர் கொண்டுள்ள போதும் இதுவரை யாரும் தம்மை வந்து பார்த்து எவ்வித உதவிகளும் வழங்க முன்வரவில்லை என மன்னார் பனங்கட்டுகொட்டு மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பாதிப்புகளை எதிர்கொண் டுள்ள மன்னார் மாவட்ட மீனவர்கள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர்,

15

## அரச ஊழியர்களின் சம்பளமற்ற விடுமுறைகள் உடனடியாக இரத்து!

கொழும்பு, டிசெ. 07

அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறைகளை அங்கீகரிப்பதை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்துவதற்கு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு விடுமுறையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு, அங்கீகரிக்கப்பட்டுள்ள கால எல்லைக்கு அமைவாக மாத்திரம் அந்த விடுமுறையைத் தொடர்ந்து

15

## மக்களுக்கு உதவித்தொகை வழங்குவதில் வடக்கில் முறைகேடுகளுக்கு இடமில்லை!

### அறிவித்தார் ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், டிசெ.07

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்த சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித் தொகை வழங்குவதில் எவ்விதமான முறைகேடுகளுக்கோ, பாரபட்சங்களுக்கோ அல்லது ஊழலுக்கோ இந்த அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது. இது ஊழலை முற்றாக ஒழித்து, நேர்மையான நிர்வாகத்தை நிலைநாட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின்

15

## கிளிநொச்சியில் உடைந்த பாலத்தை புனரமைக்கிறது இந்திய இராணுவம்



கிளிநொச்சி, டிசெ. 07

கிளிநொச்சி மாவட்டத்தில், பரந்தன் - முல்லைத்தீவு ஏ-35 வீதியில் பதினொராவது கிலோ மீற்றறில் உள்ள பாலத்தை புனரமைக்கும் பணியை இந்திய இராணுவத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை வந்துள்ள இந்திய இராணுவப் பொறியியல் பிரிவினர், வெள்ளத்தினால்

15

## சுவிற்சர்லாந்தின் நிவாரணம் விமானம் மூலம் கொழும்புக்கு!

கொழும்பு, டிசெ. 07

சுவிற்சர்லாந்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட அனர்த்த நிவாரணப் பொருட்கள் அடங்கிய விமானமொன்று நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த நிவாரணப் பொதிகளில் நீர் சுத்திகரிப்புக் கருவிகள் மற்றும் அவற்றின் செயற்பாட்டுக்கு தேவையான உபகரணங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய 17 பொதிகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

15

## உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 611!

கொழும்பு, டிசெ. 07

சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 611 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று

15

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த நிவாரண நிதியாக 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்



கொழும்பு, டிசெ. 07

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிதி நிவாரணமளிக்க 10 பில்லியன் ரூபாய் முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது. சகல பிரதேச செயலகங்கள் ஊடாகவும் இந்த நிதி நிவாரணம் வழங்கப்படும். முழு நாடும் துயரத்தை எதிர்கொண்டுள்ள போது எதிர்க்கட்சியினர் சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடுகிறார்கள். போலியான விடயங்களை சமூகமயப்படுத்தாமல் இருப்பது எமக்கு வழங்கும் மிகப்பெரிய ஒத்துழைப்பாகும் என எதிர்க்கட்சிகளிடம் வலியுறுத்துகிறேன் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு என்ற ரீதியில் மிக மோசமான பேரிடரை எதிர்கொண்டுள்ளோம். இழப்புக்களை மதிப்பிட முடியாத நிலை உள்ளது. முப்படையினரும் பொலிஸாரும், நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கு மீட்கும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது எதிர்க்கட்சியினர் அரசியல் செய்கிறார்கள். கடந்த 25 ஆம் திகதி முதல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நடவடிக்கைகள் சிறந்த முறையில் எடுக்கப்பட்டுள்ளன.

அனர்த்த நிலை ஏற்பட்ட நாளிலிருந்து முப்படையினரும் பொலிஸாரும் தமது உயிரை பொருட்படுத்தாமல் அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளார்கள். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.- என்றார்.(எ)

# வடமராட்சி கிழக்கு கடலில் இந்திய மீனவர் அட்டகாசம்!

யாழ்ப்பாணம், டிசெ. 07

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்திய இழுவை படகுகள் அட்டகாசம் புரிந்துள்ளன.

வடமராட்சி கடற்பகுதியில் அண்மைக்காலமாக இந்திய இழுவை படகுகளின் வரத்து அதிகரித்துள்ளது.

சீரற்ற காலநிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி அண்மைய நாட்களாக வடமராட்சி கிழக்கு பகுதியிலும் இந்திய மீனவர்களின் வருகை அதிகரித்துள்ளது.

கடற்பகுதி சீராக காணப்படுவதால் வடமராட்சி பகுதி மீனவர்கள் மீன்பிடி தொழிலுக்காக தற்போது கடலுக்குச் செல்கிறார்கள்.

இந்த நிலையில் மீனவர்களின் வலைகளை இந்திய இழுவை படகுகள் அறுத்துச் செல்வதால் மீனவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.


கடந்த காலத்தில் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் அதிகளவான கடற்படை டோரா படகுகள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோதும் தற்போது அந்த நடவடிக்கை குறைந்துள்ளதாகவும், இதனால் தமது கடல் பகுதிக்குள் நுழைந்து இந்திய இழுவை படகுகள் வளத்தை அழித்துச் செல்வதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக இரண்டு நாட்களாக வடமராட்சி கிழக்கு பகுதி மீனவர்களின் வலைகள் இந்திய இழுவை படகுகளால் நாசமாக்கப்பட்டுள்ளன.

தற்போதைய கடல் நிலைமை தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(எ-05)

# முன்னெச்சரிக்கையை வழங்க அரசு தவறியது

## சுரேஷ் பிரேமச்சந்திரன்



யாழ்ப்பாணம், டிசெ. 07

அனர்த்தம் தொடர்பான தகவல்கள் முன்கூட்டியே கிடைத்த நிலையிலும் அது தொடர்பில் மக்களுக்கு முன்னெச்சரிக்கை வழங்குவதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சூறாவளி அனர்த்தத்துக்கு முன்பாகவே அது தொடர்பான சம்பந்தப்பட்ட தரப்பினரின் அறிவிப்புகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற் துறை பேராசிரியரின் அறிவிப்புகளும் வெளிவந்திருந்தன.

மிகப் பாரதூரமான அளவிலான ஒரு சூறாவளி வீசவுள்ளதாகவும், அதனால் பாரிய ஒரு வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்றும் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டு, அதற்கேற்ப முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆகவே இதனைக் கவனத்தில் எடுத்து அரசாங்கம் சில ஏற்பாடுகளை ஏற்கனவே செய்திருக்குமாக இருந்தால் இந்த அனர்த்தங்களை ஓரளவுக்காவது குறைத்திருக்கலாம் என்ற கருத்து நிலவுகின்றது.

இயற்கையான அழிவுகளை யாராலும் கட்டுப்படுத்த முடியாது என்றாலும் கூட முன்கூட்டியே பல விடயங்கள் அறிய வருகின்ற பொழுது அதிலிருந்து மக்களை பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும். அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த அழிவுகளை ஓரளவுக்காவது குறைத்திருக்க முடியும் என்ற கருத்து காணப்படுகின்றது. - என்றார். (எ)

# அனர்த்த நிதி ஒதுக்கீடு குறித்து வெளிப்படை தன்மை அவசியம்

## கஜேந்திரகுமார் எம். பி. வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 07

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுகின்றன. இதனால், இந்த நிதி ஒதுக்கீடு தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் அரசாங்கம் செயல்பட வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இயற்கை அனர்த்த பாதிப்புகளின் போது அந்த பாதிப்புகளை குறைப்பதுவே அரசாங்கத்தின் பொறுப்பாகும். பல வாரங்களுக்கு முன்னரே பாதிப்பு வரும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதும், ஏன் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்று அரசாங்கம் ஆராய வேண்டும். முன்னெச்சரிக்கை நடடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் உயிரிழப்புகளை குறைத்திருக்கலாம்.

இதேவேளை இந்த அனர்த்தத்தில் வடக்கு மாகாணத்தில் பாதிப்பு ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருந்தாலும் கிளிநொச்சி, வவுனியா, மன்னாரில் அதிகமாக இருந்தது. இந்த அனர்த்தங்கள் நடந்துகொண்டிருந்த போது இந்த அரசாங்கம் நடந்து கொண்ட விதம் தொடர்பில் பல விமர்சனங்கள் இருக்கின்றன. யாழில் மிகக்குறைவான பாதிப்புகள் இருந்த இடத்திலேயே முன்னுரிமை வழங்கப்பட்டு கூட்டங்கள் நடந்தன.

வடக்கு மற்றும் ஏனைய மாகாணங்களில் இந்தக் கூட்டங்கள் நடக்கவில்லை. ஒருங்கிணைக்கப்பட்ட வேலைத்திட்டத்தை நடத்துவதற்கு வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் அரசாங்கம் விரும்பவில்லை.

யாழ்ப்பாணத்தில் 14, 459 வீடுகள் ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளதாக 361 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இது தொடர்பில் நாங்கள் ஆழமாக யோசித்தால் நெடுந்தீவில் 2024ஆம் ஆண்டில் 893 வீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இருக்கின்றது. ஆனால், 1216 வீடுகள் அங்கு பாதிக்கப்பட்டுள்ளதாக நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

அந்த வகையில் 3 கோடியே 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சில முரண்பாடுகள் உள்ளன. இந்த நிதி பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படக்கூடாது என்று கூறவில்லை. அவர்களுக்கு கிடைக்க வேண்டும். ஆனால், இதில் ஊழல் நடக்கக்கூடாது. இதனால் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். இது தொடர்பில் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். தேசிய மக்கள் சக்தியினர் தலையிட்டு இந்த விவரங்கள் தவறாக நிரப்பப்பட்ட காரணமாக இருந்துள்ளதாகவும், இதில் உண்மைத் தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்கின்றோம்- என்றார். (எ)

# 25, 000 ரூபா கொடுப்பனவில் எவ்வித ஊழல்களும் இல்லை

## யாழ். அரசாங்க அதிபர் பிரதீபன்

யாழ்ப்பாணம், டிசெ. 07

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவில் எந்தவிதமான ஊழல்களும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறாது என்று மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நிலவரம் தொடர்பான அறிக்கை 30. 11. 2025 அன்று தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த நிலவர அறிக்கையின் பிரகாரம் 25 மாவட்டங்களுக்குமான நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது.

அந்தவகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 14ஆயிரத்து 624 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிக்கை செய்தோம். அந்த அறிக்கையின் பிரகாரம் 365. 6 மில்லியன் ரூபாய் எமது மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

05. 12. 2025 அன்று மாலை 05.00 மணியளவில் கிடைக்கப்பெற்ற அனர்த்த சேவைகள் நிவாரண நிலையத்தின் கடிதத்தின் பிரகாரம், சுற்றிக்கையை விட மேலதிக விடயத்தையும் அந்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. முற்றிலும் சேதமடைந்த வீடுகள், பகுதியில் சேத மடைந்த வீடுகள், வீடுகளுக்கு சேதங்கள் ஏற்படாவிட்டாலும் வெள்ளத்தால் சிறிய அளவு பாதிக்கப்பட்ட வீடுகள் ஆகியவற்றையும் இந்த கொடுப்பனவுக் கான தகுதிக்குள் உள்ளடக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் ஆகியோரின் கையொப்பங்களை பெற்ற, தகுதியான பயனாளிகளுக்கு மாத்திரமே கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டன.

சரியான முறையில் அந்த 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட பின்னர் மேலதிகமாக நிதி ஒதுக்கீடு எங்களிடம் இருக்குமாக இருந்தால் அந்த நிதியானது அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்துக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.- என்றார். (எ-03-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமான வரி அறிக்கைகளை சமர்ப்பிக்க கால அவகாசம்

## டிசெம்பர் 31ஆம் திகதி வரை நீடிப்பு

கொழும்பு, டிசெ. 07

வருமான வரிக்காகப் பதிவு செய்துள்ள அனைத்து நபர்களும் தமது வருமான வரி அறிக்கைகளை நவம்பர் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்காவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விடுத்திருந்த அறிவிப்பு திருத்தப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'டித்வா' புயலின் தாக்கம் மற்றும் இலங்கையின் பல பகுதிகளில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக, பல வரி செலுத்துவோர் மற்றும் அவர்களது முகவர்களால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் வருமான அறிக்கைகளை சமர்ப்பிக்க முடியாமல் போயுள்ளது.

இந்த நிலையை கருத்தில் கொண்டு, வரி செலுத்துவோர் 2024 - 2025 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான அறிக்கைகளை 2025 டிசெம்பர் 31 அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தால், தாமதமாக சமர்ப்பிப்பதற்கான அபராதம், மதிப்பீடுகளை வெளியிடுதல் அல்லது குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்தல் போன்ற சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாகாமல் அறிக்கைகளை சமர்ப்பிக்க முடியும்.

இதற்கமைய, இதுவரை அறிக்கைகளை சமர்ப்பிக்க முடியாத அனைத்து வரி செலுத்துவோரும் வருமான அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள இந்த சலுகை காலத்தை பயன்படுத்துமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.(எ)

## அரச சேவை, அரச சேவை அல்லாத

# பட்டதாரிகளை விரைவில் ஆசிரியர் சேவையில் இணைக்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 07

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு தடையாக இருந்த வயதெல்லை உள்ளிட்ட விடயங்களுக்கு நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அரச சேவை மற்றும் அரச சேவை அல்லாத பட்டதாரிகளை விரைவில் ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் சந்தன சூரியஆராச்சி எம். பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், அதற்கு எதிராக ஒரு தரப்பினர் நீதிமன்றம் சென்றதால் அந்த நடவடிக்கையை இடைநிறுத்தி இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பு, அரச சேவை ஆணைக்குழு மற்றும் அரசாங்கம் இதுதொடர்பில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து, அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ள நீதிமன்றத்துக்கு எமது நிலைப்பாட்டை தெரிவித்திருந்தோம். இதன் பிரகாரம் நீதிமன்ற வழக்கு கடந்த மாதம் 20ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள வழக்கு தீர்ப்பின்படி அரச சேவையில் உள்ள பட்டதாரிகள் மற்றும் அரச சேவையில் இல்லாத பட்டதாரிகளையும் வயதெல்லையை நிர்ணயம் செய்து, ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்கான வயதெல்லையை நிர்ணயம் செய்து தனித்தனியாக பரீட்சைகளை நடத்தி நிலவும் வெற்றிடங்களுக்காக ஆசிரியர் சேவையில் மூன்றாம் தரத்தில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் எதிர்காலத்தில் வயதெல்லையை திருத்தம் செய்து பரீட்சையை நடத்தி ஆசிரியர் சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகளை இணைத்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (எ)

# வெள்ள நிவாரண உதவிக்கு துரித பொறிமுறை அவசியம்

மட்டக்களப்பு, டிசெ. 07

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் உடனடியாகக் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், அரசாங்கம் துரிதமான பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சந்திவெளி மற்றும் முறாவோடை பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுடன் அவர்களின் தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய நிவாரண உதவிகளும் பொருட்களும் வழங்கப்பட்டன. இது அவர்களுக்கு வழங்கப்பட்ட முதலாவது அத்தியாவசிய நிவாரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், நிவாரண உதவிகள் மக்களைச் சென்றடைவதில் கால தாமதம் ஏற்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

நிவாரணங்களை வினைத்திறனாக கையாளவும், பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக சென்றடைய செய்யவும், தொடர்புடைய அரச ஊழியர்களை கொண்டு துரிதமான பொறிமுறை ஒன்றை அரசாங்கம் உடனடியாக உருவாக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.(எ)

# யாழில் சைக்கிள்களை திருடிய நால்வர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 07

யாழ்ப்பாணத்தில் சைக்கிள்களை திருடி வந்த கும்பலை சேர்ந்த நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நகர்ப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் காணாமல்போனமை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன், சந்தேகநபர் ஒருவரை கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், மேலும் மூவரை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து 12 சைக்கிள்களை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நால்வரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

## 63 கிலோ ஐஸ், 15 கிலோ ஹெரோயின்

# போதைப்பொருட்களுடன் படகு கற்பிட்டி கடற்பரப்பில் பறிமுதல்

புத்தளம், டிசெ. 07

புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு கடற்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது, பெருமளவான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்துக்கிடமான படகொன்றை சோதனையிட்ட போதே, 03 உர மூடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

63 கிலோ 718 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 14 கிலோ 802 கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட போதைப் பொருள் தொகை மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த படகின் உரிமையாளர் கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகம் முன்னெடுத்து வருகிறது.(எ)

## சிவனொளிபாதமலைக்கு

# யாத்திரை செல்லும் பக்தர்களின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு

கொழும்பு, டிசெ. 07

சிவனொளிபாதமலை யாத்திரைக்கு செல்லும் பக்தர்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு அறிக்கையொன்றை பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளது.

சிவனொளிபாதமலை யாத்திரை காலம் கடந்த 04ஆம் திகதி, போயா தினத்தன்று ஆரம்பமானது. தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் நிபுணர்கள் குழு, குறித்த இடத்தை பார்வையிட்டு, சிவனொளி பாதமலை தளத்துக்கு செல்லும் ஹற்றன் வீதியிலுள்ள மகாகிரிதம்ப பகுதியில் தற்போதைய புவியியல் உறுதியற்ற தன்மை குறித்து ஆய்வு நடத்தியது.

இதன்படி, பாதையை மீட்டெடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.


தற்போதைய சூழ்நிலையில், ஹற்றன் நுழைவாயில் வழியாக சிவனொளிபாதமலைக்கு செல்வது, சம்பந்தப்பட்ட அறிக்கையின் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும் வரை கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

சிவனொளிபாதமலை யாத்திரை தளத்திற்கு ஹற்றன் பாதை ஆபத்தானது என்பதால், யாத்திரை தளம் வரை பயணிக்கும் பக்தர்களின் பாதுகாப்பிற்காக பாதையை மட்டுப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாத்திரை தளத்துக்கு செல்ல விரும்பும் பக்தர்கள், தங்கள் பகுதிகளிலிருந்து போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்யும் போது, நிலவும் மோசமான வானிலை மற்றும் வழித்தடங்கள் குறித்து மிகவும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் செயல்படுமாறு பொலிஸ் தலைமையகம் வலியுறுத்தியுள்ளது.(எ)

# பம்பலப்பிட்டி கடற்கரை வீதியில் பாரிய விபத்து

## ஐவர் மருத்துவமனையில்



கொழும்பு, டிசெ. 07

பம்பலப்பிட்டி கடற்கரை வீதியில் நேற்று அதிகாலை 02:30 மணியளவில் இடம்பெற்ற பாரிய விபத்தில் ஐவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதியின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த இரு வாகனங்கள் மீது, வேகமாக வந்த லொறி ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தை திசையிலிருந்து கொழுப்பிட்டி நோக்கிச் சென்ற லொறி ஒன்றே இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

வாகனங்களுடன் மோதிய பின்னர், அந்த லொறி ரயில் பாதையை நோக்கிச் சென்று, இறுதியாக ரயில் தண்டவாளத்தில் நின்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பம்பலப்பிட்டி பொலிஸார் இந்த விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும்

கொழும்பு, டிசெ. 07

வடகிழக்கு பருவமழை நாட்டின் ஊடாக படிப்படியாக நிலைநிறுத்தப்பட்டு வருவதால் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா, வடமேல் மற்றும் வடமத்திய மகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னலால் ஏற்படும் ஆபத்துக்களை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு குறித்த திணைக்களம் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.(எ)

# சர்வதேச நன்கொடையாளர் மாநாடு கொழும்பில் நடத்தப்பட வேண்டும்

## ஜனாதிபதியிடம் ஹக்கீம் எம். பி. கோரிக்கை



கொழும்பு, டிசெ. 07

நாட்டை மீளக் கட்டியெழுப்ப ஜனாதிபதி உடனடியாக செயல்பட்டு, சர்வதேச நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி இரண்டு வாரங்களுக்குள் சர்வதேச நன்கொடையாளர் மாநாடொன்றை கொழும்பில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது அனர்த்தத்தால் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பையும் சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட பொருளாதார இழப்பையும் ஒப்பிட்டுபார்க்கும்போது, சுனாமியால் ஒரு பில்லியன் டொலருக்கும் அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த அனர்த்தத்தில் 6 முதல் 7 பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால், இந்த அனர்த்தம் 6 தடவை சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதற்கு சமமாகும். அத்துடன் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 முதல் 5 வீத இழப்பாகும்.

இந்த அனர்த்தம் தொடர்பில் சர்வதேச நாடுகளின் அவதானம் இன்னும் இரண்டு வாரங்களில் வேறு பகுதிக்கு திருப்பிவிடும். அதனால் ஜனாதிபதி உடனடியாக செயல்பட்டு, சர்வதேச நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி இரண்டு வாரங்களுக்குள் சர்வதேச நன்கொடையாளர் மாநாடொன்றை கொழும்பில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட இந்தியா, ஜப்பான், ஜேர்மன், ஐக்கிய அரபு இராஜ்ஜியம் போன்ற நாடுகள் மற்றும் கட்டார், சவூதி அரேபியா நாட்டு தலைவர்களுடன் தொடர்புகொண்டு, சர்வதேச நன்கொடை மாநாடொன்றை நடத்தி 2, 3 பில்லியன் டொலர்களை தேடிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கானதொரு முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.- என்றார். (எ)

# எமது நிதி முகாமைத்துவம் சட்டத்துக்கு அமைவானது

## நிதி பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

அரச நிதி முகாமைத்துவ சட்டத்துக்கு அமைவாகவே நிதி நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட நிதியம் குறித்தும் எதிர்க்கட்சியினர் மாறுபட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். இந்த நிதியத்துக்குரிய சட்ட அங்கீகாரம் வெகுவிரைவில் பெற்றுக்கொள்ளப்படும். அனர்த்தத்துக்கு பின்னர் அரசாங்கம் ஏதும் செய்யவில்லை என்று எதிர்க்கட்சியினர் தான் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். எமது செயல்பாட்டை சர்வதேசம் வரவேற்றுள்ளது என நிதி மற்றும் பொருளாதார திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு என்ற அடிப்படையில் மிக மோசமான இயற்கை அனர்த்தத்தை எதிர்கொண்டோம். பேரிடரால் ஏற்பட்ட உயிரிழப்பை ஒருபோதும் மதிப்பிட முடியாது. சேதமடைந்த சொத்துக்களை இன்றளவில் மதிப்பிட முடியாத நிலை உள்ளது. இழப்புக்களை மதிப்பிட்டால் தான் புனரமைப்புக்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்க முடியும்.

அனர்த்தத்தை தடுக்க அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை, அனர்த்தத்தின் பின்னர் அரசாங்கம் முறையாக செயல்படவில்லை என்று எதிர்க்கட்சியினர் மாத்திரம் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். அது அவர்களின் அரசியல் செயல்பாடாகும். அனர்த்தத்தின் பின்னர் அரசாங்கம் செயல்பட்ட விதத்தை உலக நாடுகள் வரவேற்றுள்ளன. நாட்டு மக்கள் உண்மையை அறிவார்கள்.- என்றார். (எ)

# காணி பிரச்னை காரணமாக தாக்குதலில் ஒருவர் மரணம்!

கொழும்பு, டிசெ. 07

மொரகஹஹேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோனபலை பிரதேசத்தில், காணி எல்லைப் பிரச்னை தொடர்பில் ஏற்பட்ட வாய்த் தகராறு முற்றிய நிலையில், ஒருவர் தாக்கப்பட்டதில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றது. தாக்குதலுக்குள்ளான நபரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

கோபிவத்தை, கோனபலை பிரதேசத்தை சேர்ந்த 64 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 71 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.(எ)

# நீர்த்தேக்கம் உச்ச மட்டத்தை நெருங்குவதால் எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 07

எதிர்வரும் நாட்களில் மழைப்பொழிவு அதிகரித்தால், மொரகஹகந்த நீர்த்தேக்கம் அதன் உச்ச நீர்மட்டத்தை அடையும் என்று இலங்கை மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

உச்ச நீர்மட்டத்தை எட்டும் போது நீர்த்தேக்கத்துக்கு நீர் வரும் வேகத்தைப் பொறுத்து, வான் கதவுகளைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வான் கதவுகள் திறக்கப்படும்போது நீர் அம்பன் கங்கையில் திறந்துவிடப்படும்.

இதன் விளைவாக அம்பன் கங்கை மற்றும் மகாவலி கங்கையின் நீர்மட்டம் உயரும் என மகாவலி அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த காரணங்களால், அம்பன் கங்கை மற்றும் மகாவலி கங்கையின் இருபுறமும் வசிக்கும் மக்கள் நீர் மட்டங்கள் குறித்து அவதானத்துடன் இருக்குமாறு மகாவலி அதிகார சபை அறிவித்துள்ளது.

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் மொத்த நீர் சதவீதம் தற்போது 98. 87 சதவீதமாக உள்ளது. வரும் நாட்களில் மழைப்பொழிவு அதிகரித்தால் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் உச்ச அளவை அடையும். மகாவலி அதிகார சபை இது தொடர்பில் பொலநறுவை அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அறிவித்துள்ளது.

வான் கதவுகளை திறக்க நேரிட்டால், அது குறித்து எல்லெஹெர பிரதேச செயலக பிரிவில் உள்ள அனைத்து மக்களுக்கும் விளம்பர நடவடிக்கைகளின் மூலம் அறிவிக்க, மொரகஹகந்த பொறுப்பு பொறியியலாளர் தனது முகாமைத்துவப் பிரிவுக்கு அறிவித்துள்ளார். (எ)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## வரைபு வரவு செலவுத் திட்டம் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கு அமைவாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட வரைபு புத்தூரில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திலும், அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்களிலும், உப அலுவலக பொது நூலகங்களிலும் 2025.12.08 ஆம் திகதி முதல் 2025.12.15 ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் பார்வையிட முடியும்.

மேலும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முகப் புத்தகத்திலும் பொதுமக்கள் குறித்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்வையிடலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

எனவே, வரவு செலவுத் திட்டம் தொடர்பான தங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பின்வரும் ஏதேனும் ஒரு முறையின் மூலம் 2025.12.15 மதியம் 12.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

தபால் முகவரி : தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
பருத்தித்துறை வீதி, புத்தூர்.

முகப்புத்தகம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
ஈமெயில் : secveps@yahoo.com
தொலைபேசி : 0212058867

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்
07.12.2025


# "இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட இழப்புக்கு அரசாங்கமே பொறுப்பு"

கொழும்பு, டிசெ. 07

இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் சொத்து இழப்புக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும். காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த முன் அறிவித்தல்களை அலட்சியப்படுத்தி அரசாங்கம் மக்களின் உயிரை பலியெடுத்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த அனர்த்தத்தின் பாதிப்பை குறைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இலங்கை இவ்வாறான பேரிடரை எதிர்கொள்ள போவதாக சர்வதேச செய்தி நிறுவனங்களும் முன்கூட்டிய தாகவே அறிக்கை வெளியிட்டுள்ளன. அதேபோன்று சர்வதேச கால நிலை மாநாடுகளிலும் இலங்கை பாரியதொரு காலநிலை அனர்த்தத்தை எதிர்கொள்ள போவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த மாநாடுகளில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளார்கள். ஆனால், எவ்வித நடவடிக் கைகளும் எடுக்கப்படவில்லை. - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.12.2023 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புலம்பெயர் மக்களின் உதவி?

அரசாங்கம் புலம்பெயர் மக்களிடம் உதவிகளை கோரியிருக்கின்றது. நாடு பாதிப்பை எதிர்கொண்டிருக்கும் இத்தருணத்தில் புலம்பெயர்ந்த மக்கள் தாராளமாக உதவிகளை வழங்கவேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கின்றார். பொதுவாக புலம்பெயர் சமூகம் என்று குறிப்பிடும்போது பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் வாழும் இலங்கையர்களை குறித்தாலும், அடிப்படையில் இலங்கையின் புலம்பெயர் சமூகம் என்றால் அது ஈழத் தமிழர்கள்தான். ஈழத் தமிழர்களை விடுத்து புலம்பெயர் சமூகம் என்று ஒன்றை அடையாளப்படுத்த முடியாது. ஆனால் ஐரோப்பாவில் சொற்ப அளவிலும் ஆனால் ஐரோப்பாவிற்கு வெளியிலும் ஏராளமான சிங்கள மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக உதவக் கூடும்.

அரசாங்கத்தின் கோரிக்கை ஒன்றின் அடிப்படையில் மக்கள் திரண்டு நிதியளிக்கக்கூடிய நிலையில்லை. ஏனெனில் தமிழ் கட்சிகள் கூறினால் கூட, தமிழ் மக்கள் திரண்டு உதவியளிப்பார்களா என்னும் நிலைமை காணப்படும் போது, அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக பெருமளவானவர்கள் உதவியளிக்கக் கூடிய நிலையில்லை.

ஆனால் புலம்பெயர் சூழலிருந்து தன்னிச்சையாக பலரும் தங்களுடைய இலங்கைத் தொடர்புகளின் வழியாக உதவி வருவதாகவே தெரிகின்றது. அதே போன்று தமிழ் அரசியல் கட்சிகள் தங்களுடைய தொடர்புகளின் ஊடாக உதவி வருகின்றனர். ஆனால் இவ்வாறான உதவிகள் வழமைபோல் முறையான ஒழுங்கமைப்பின் கீழ் இடம்பெறவில்லை. கிடைக்கும் தகவல்களின்படி புலம்பெயர் நாடுகளில் பலர் நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றனர் ஆனால் அவ்வாறு சேகரிக்கப்படும் நிதி யாரிடம் சேர்க்கப்படுகின்றது?

அவ்வாறா உதவிகள் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் வழங்கப்படுகின்றதா - எங்கு என்ன உதவி தேவை என்பது தொடர்பில் அனைத்து தகவல்களும் ஓரிடத்தில் இருக்கின்றனவா? பதில் வழமைபோல் "இல்லை". - உண்மையில் வடக்கு கிழக்கு முழுவதும் ஓரிடத்தில் இல்லாவிட்டாலும் கூட, ஒவ்வொரு மாவட்டங்கள் தழுவிய சேத விவரங்களும் ஓரிடத்தில் இருக்கவேண்டும். அப்போதுதான் உதவிகளுக்கான செயற்பாடுகள் ஒருங்கிணைப்பின் கீழ் இடம்பெறும். எவருக்கு தேவையுள்ளது - எங்கு மேலதிகமாக உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பவற்றை அறிந்து அதற்கேற்ப செயற்பட முடியும். ஆனால் இங்கு என்ன நடைபெறுகின்றது?

யுத்தத்தின் பின்னர் பல்வேறு புலம்பெயர் அமைப்புக்களும் தனிநபர்களும் வடக்கு-கிழக்கில் முக்கியமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல திட்டங்களை செய்திருப்பதாக கூறிவருகின்றனர். அவர்கள் கூறுவதைப் பார்த்தால் பல மில்லியன் டொலர்கள் உதவி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் என்ன விளைவுகள் ஏற்பட்டது என்றால் ஒன்றுமில்லை. இப்போதும் சொந்தக் காலில் நிற்கக் கூடிய சமூகமாக தமிழர் சமூகம் இல்லை.

வெள்ளம் என்றவுடன் உடனடியாக புலம்பெயர் உதவிகளைத்தான் எதிர்பார்க்கின்றனர். அவர்களிடம் எந்தவொரு சுய கட்டமைப்புக்களும் இல்லை. இதற்கு என்ன காரணம்? திட்மிடப்பட்ட வகையில் தூரநோக்கோடு நிதிகள் வழங்கப்படவில்லை. புலம்பெயர் சூழலிலும் சரி, தாயகத்திலும் சரி முறையான, ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்புக்கள் இல்லை.

உண்மையில் அரசாங்கம் நியமித்தது போன்று, தமிழ் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து, ஒரு மீட்புப் பணிக் குழுவொன்றை நியமித்திருக்கவேண்டும். அதன் கீழ் அனைத்து, உடனடி மற்றும் நீண்ட கால மீட்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு நடப்பதோ, தடியெடுத்தவர் எல்லாம் தண்டர் காரர் என்பது போல், அனைவருடைய கைகளிலும் உலர் உணவுப் பொதிகளும், அருகே புகைப்படம் எடுப்பதற்கான ஆட்களும். இன்னும் சில தினாங்ககளில் இவர்களுடைய சத்தம் ஓய்ந்துவிடும். இனி அடுத்த அனர்த்தம் ஒன்று வந்தவுடன் மீண்டும் நிதி சேகரப்பு படலம் ஆரம்பிக்கும்.

# ஆடம்பரங்களை தவிர்த்து அமைதியாக கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடுங்கள்

## யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 07

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட சூறாவளி மற்றும் வெள்ளப்பெருக்கினால் உயிரிழந்த, மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை மனதில் கொண்டவர்களாக வருகின்ற கிறிஸ்து பிறப்பு விழாவை அமைதியுடனும் அர்த்தமுள்ள வகையிலும் கொண்டாடுமாறு யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜோ.ஜெபரட்ணம் கிறிஸ்தவ மக்களை கேட்டுள்ளார்.

பொருத்தமற்ற ஆடம்பரங்களை தவிர்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கரம் நீட்டும் செயற்பாடுகளை முன்னெடுத்து, பாலன் இயேசு கொண்டு வந்த அமைதி விடுதலை ஆகிய நற்செய்திகளை மக்களுக்கு அறிவித்து, துன்புறும் மக்களோடு ஒன்றிணைந்த உள்ளங்களோடு கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடுமாறு குரு முதல்வர் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# வழுக்கையாற்றை பாதுகாக்கும் திட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பு

## வடக்கு மாகாண ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 06

யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் பாதுகாப்புக்கு இன்றியமையாத வழுக்கையாற்றைப் பாதுகாப்பது காலத்தின் கட்டாயமாகும். 'பங்கேற்புச் செயல் ஆய்வின் ஊடாக நீர் பாதுகாப்பு' திட்டத்தின் ஊடாக இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஆய்வின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண நிர்வாகம் தனது ஒத்துழைப்பை வழங்கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உறுதியளித்தார்.

வடக்கு மாகாணத்தில் 'பங்கேற்புச் செயல் ஆய்வின் ஊடாக நீர் பாதுகாப்பு' திட்டத்தின் கீழ், வழுக்கையாறு தொடர்பான ஆய்வின் ஒரு பகுதியாக, உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளுடனான விசேட கலந்தாய்வு சுன்னாகத்திலுள்ள எம்.எம். மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.


இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

காலநிலை மாற்றம் இன்று உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. அண்மைய காலங்களில் ஒரே மாதத்தில் கொட்டித் தீர்க்கும் மழை, அடுத்த மாதமே வாட்டி வதைக்கும் வறட்சி என நாம் இதுவரை கண்டிராத அனர்த்தங்களைச் சந்தித்து வருகிறோம். இதனை 'இயற்கையின் கோபம்' என்று கடந்து செல்வதை விட, 'இயற்கையை நாம் கையாளத் தவறியதன் விளைவு' என்று புரிந்து கொள்வதே சிறந்தது. மழைநீர் வழிந்தோட வேண்டிய பாதைகளை நாம் அடைத்துவிட்டு, வீடுகளுக்குள் வெள்ளம் வருகிறது என்று கவலைப்படுவதில் அர்த்தமில்லை. வழுக்கையாறு போன்ற இயற்கையான நீரோட்டப் பாதைகள் தூர்ந்து போனதும், ஆக்கிரமிக்கப்பட்டதும், பராமரிப்பின்றிக் கிடப்பதுமே இன்றைய பல பேரிடர்களுக்கு மூல காரணமாகும்.

யாழ். குடாநாடு ஒரு தீவுப் பகுதி. எமக்கு ஆறுகள் இல்லை என்று கருதப்பட்டாலும், மழைநீரை கடலுக்குக் கொண்டு சேர்க்கும் அதேவேளை, நிலத்தடி நீரைச் செறிவூட்டும் வழுக்கையாறு போன்ற இயற்கையான வடிகால்கள் எமக்கு உண்டு. மயிலிட்டித்துறையிலிருந்து அராலித்துறை வரையில் இது செல்கின்றது. வழுக்கையாறு முறையாகப் பராமரிக்கப்பட்டால் மட்டுமே, வலிகாமம் பகுதியின் கிணறுகளில் நீர் சுரக்கும் உவர் நீர் ஊடுருவல் தடுக்கப்படும். அத்துடன், கனமழை காலங்களில் வலிகாமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் வெள்ளத்தில் மூழ்காமல் இருக்க, இந்த ஆறு தடையின்றி ஓட வேண்டும்.

உலக வங்கியின் நிதியுதவியில் குளங்களைத் தூர்வாரும் செயற்பாடு அடுத்த ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்போது வழுக்கையாற்றுப் படுக்கையில் அமைந்துள்ள குளங்களும் தூர்வாரப்படும். முற்காலத்தில் மழைநீரை வீடுகளுக்குள் சேமிக்கும் பழக்கம் இருந்தது. ஆனால் இன்று வீட்டைச் சுற்றி முழுமையாக சிமெந்து இட்டு, மழைநீர் நிலத்தடியில் இறங்க முடியாதவாறு தடுத்து வைத்துள்ளோம். யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீருக்கும் விவசாயத்துக்கு நிலத்தடி நீரே ஆதாரம் என்பதை உணர்ந்து எமது நீரின் அளவையும் தரத்தையும் பாதுகாப்பது அனைவரதும் பொறுப்பாகும்-என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் முகவரி பணமா?

பழ. அசோக்குமார்



மின்னல் வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய உலகம், வசதி வாய்ப்புகள், அதிநவீன தொழில்நுட்பங்கள், ஆடம்பரங்கள் என அனைத்துக்கும் காரணமான பணத்தைத் தேடிப் பெரிய வேட்டையை நடத்திக்கொண்டிருக்கிறது. இந்த பரபரப்பான ஓட்டத்தில், ஒருவரின் வெற்றிக்கு தகுதியளிக்கும் முகவரி எது என்று கேட்டால், பலரும் தயக்கமின்றிச் சுட்டிக்காட்டுவது பொருட்செல்வமான பணத்தை மட்டுமே.

ஆனால், ஒரு மனிதனின் முழு வெற்றிக்கும், உண்மையான சாதனைக்கும் பணம் மட்டுமே முழுக் காரணமாகி விடுமா? ஏனெனில், பணம் என்பது ஒரு மனிதனின் அர்த்தமுள்ள வெற்றியின் வரைபடத்தில், அது ஒரு சிறு பகுதி மட்டுமே. அதுவே முழு முகவரி அல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்வது அவசியம்.

பணம் ஏன் வெற்றியின் மிக முக்கியமான அடையாளமாகக் கருதப்படுகிறது என்பதற்கு, இந்த பரபரப்பான உலகம் பல வலுவான காரணங்களை நம் முன்னே அடுக்கிக் காட்டும். பெரும்பாலும், நிரந்தரமில்லாத வேலை வாய்ப்புகளும் மற்றும் நிச்சயமற்ற எதிர்காலமும் நிறைந்துள்ள இந்தக் காலத்தில், பணம்தான் ஒருவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கையான பாதுகாப்பை வழங்குகிறது. எதிர்பாராத மருத்துவச் செலவுகள் அல்லது வேலை இழப்பு போன்ற நெருக்கடிச் சூழல்களைச் சமாளிக்கப் பணம் அத்தியாவசியமானது.

ஒருவருக்கு சிறந்த தொழில், வீடு, வாகனம், கல்வி, தரமான மருத்துவம், விருந்து, கேளிக்கை, ஆடம்பரப் பயணம் போன்ற அனைத்தையும் பணம் அளிக்கிறது என்பது உண்மைதான். பணத்தின் இந்த வலிமை சமூகத்தில் ஒருவருடைய கௌரவத்தையும், மதிப்பையும் உயர்த்துவதாக நடைமுறை உலகம் நம்புகிறது.

ஒருவர் நினைப்பதை எல்லாம் அடையத் தேவையான அனைத்து வாய்ப்புகளையும் பணம் தடையின்றி வழங்குகிறது. பணம் இல்லாதவர்கள் பல கனவுகளைத் துறக்கவும், ஆசைகளைத் தியாகம் செய்யவும் நேரிடும்போது, பணக்காரர்கள் அவற்றை எளிதில் அடைந்து விடுகிறார்கள். இதனால், அனைவருக்கும் பணத்தின் மீதான தீராத ஈர்ப்பும், பெருங்கனவும் அதிகரிக்கிறது. எனவே, பணம் என்பது ஒருவரைச் சமூகத்தில் அங்கீகரிக்கச் செய்யும் தவிர்க்க முடியாத ஒரு புறக் காரணியாகச் செயல்படுகிறது என்ற வலுவான வாதத்தைத் தவிர்க்க இயலாது.

வேகமான உலகில், பலரும் பணத்தை நோக்கிய தீவிர வேட்டை நடத்தும் போது, ஆரோக்கியத்தையும் குடும்ப உறவுகளையும் இழக்க வேண்டியிருக்கிறது. ஆண்டுக்குக் கோடிகளை ஈட்டுவது ஒரு வெற்றியாக இருக்கலாம் ஆனால் மன அழுத்தம், தூக்கமின்மை மற்றும் மகிழ்ச்சியின்மை, உளவியல் சிக்கல்கள், நிம்மதியின்மை ஆகிய உள்ளத்துச் சுமைகளுடன் வாழ்வதற்குப் பெயர் வெற்றியா? ஒரு மனிதனின் உண்மையான வெற்றி என்பது, பொருளாதார ரீதியான வளர்ச்சிக்கும், தனிப்பட்ட மன அமைதிக்கும் இடையில் ஒரு சரியான சமநிலையைப் பேணுவது ஆகும். வேலையிலும் வாழ்க்கையிலும் பொருளீட்டலிலும் ஒரு சிறந்த ஒத்திசைவைக் காண்பதே உள்ளுணர்வு தரும் உண்மையான மன நிறைவு.

பணத்தை வைத்து மிகப் பெரிய மாளிகைகளை வாங்கலாம் ஆனால், அதற்குள் நிம்மதியான குடும்பத்தைக் குடியேற்ற முடியாது. பரபரப்பான உலகில் மனித உறவுகள் சிதைந்து வருகின்றன. எனவே, உண்மையான அன்பு கொண்ட குடும்பம், நம்பகமான நண்பர்கள், சமூகத்தின் மீதான நல்லுறவு ஆகியவை பணத்தால் வாங்க முடியாத விலைமதிப்பற்ற உறவுச் சொத்துகள் ஆகும்.

ஒருவன் தன் வாழ்க்கையில் பெறும் அன்பு, மதிப்பு, மற்றும் சமூக மரியாதை ஆகியவை, அவனது வங்கிக் கணக்கில் உள்ள தொகையைவிடப் பல மடங்கு மதிப்பு வாய்ந்த வெற்றியைத் தீர்மானிக்கும் சக்திகளாக விளங்குகின்றன. அன்பு, சமூக சேவை மற்றும் மனிதநேயத்தின் அடித்தளத்தில் கட்டப்படும் வெற்றியே என்றும் நிலைத்திருக்கும்.

செல்வச் செழிப்பில் கொடிகட்டிப் பறந்த எத்தனையோ பெரும் பணக்காரர்களின் வெற்றி, சில ஆண்டுகளுக்குப் பிறகு வரலாற்றில் காணாமல் போய்விடுகிறது. ஆனால், செயற்கரிய சேவைகளால் சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய அப்துல் கலாம், அன்னை தெரசா போன்றோரின் வெற்றி தலைமுறைகளைக் கடந்தும் இன்றும் பேசப்படுகிறதே! அப்படியெனில், எது ஒரு மனிதரின் நிரந்தர வெற்றி? ஒரு மனிதர்தான் ஈட்டிய செல்வத்தையும் அறிவையும் கொண்டு, மற்றவர்களின் வாழ்க்கையை எந்த அளவுக்கு மேம்படுத்தினார் என்பதே அவரது வெற்றியில் அவர் பதிக்கும் ஆழமான தார்மிக முத்திரையாகும்.

பணம் என்பது ஓர் இலக்கை அடைவதற்கான சக்தி வாய்ந்த கருவிதான் ஆனால், அதுவே வாழ்வின் ஒட்டுமொத்த இலக்காக மாறும்போதுதான், வாழ்க்கை தனது அர்த்தத்தை இழக்கிறது. ஒரு மனிதனின் வெற்றியைத் தீர்மானிப்பதில் பணம் ஒரு முக்கியமான கருவியாக உள்ளது ஆனால், அதுவே இலக்கு அல்ல.

பணம் ஒருவரை அதிகாரம், வாய்ப்புகள் மற்றும் ஆடம்பரத்தை நோக்கி இட்டுச் செல்லலாம். இருப்பினும், நிலையற்ற வாழ்வில் நிரந்தர மகிழ்ச்சி, நீடித்த புகழ், மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கை ஆகியவற்றை உறுதி செய்வது, ஒருவரின் அறநெறிப் பண்புகள், ஆரோக்கியம் மற்றும் அவர் மற்றவர்களுடன் கொண்டுள்ள அன்பான அணுகுமுறையும், ஆழமான உறவுகளும், சமூகத்துக்கான சேவைகளுமே ஆகும்.!

## இந்தவார ராசிபலன் 07.12.2025 - 13.12.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - காரத்திகை 21
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி :திரிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

ஒரு பக்கம் நெருக்கடி ஏற்படும். மறுபக்கம் எடுக்கும் வேலை வெற்றியாகும். நினைத்த செயல் நடக்கும். செய்து வரும் தொழிலில் முன்னேற்றம் அடைவீர்கள். பளுத்த வேலை நடக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். ஒவ்வொரு வேலையையும் திட்டமிட்டு செய்வது நல்லது.அரசு வழி வேலைகளில் அதிகபட்ச கவனம் தேவை. வியாபாரிகள் கணக்கு வழக்குகளை சரியாக வைத்துக் கொள்வது நல்லது.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

தடைபட்ட வேலைகளை முடிக்க முடியும். வெளி வட்டாரத்தில் செல்வாக்கு உயரும்.தம்பதிக்குள் ஏற்பட்ட பிரச்னை விலகும். ஒரு சிலருக்கு புதிய சொத்து சேரும். எதிர்பார்த்த பணம் வரும். பழைய கடன்களை அடைப்பீர். நெருக்கடி நீங்கும். மிருகசீரிடம் 1,2: நினைத்த வேலை நடக்கும். சூழ்நிலையை அறிந்து புத்திசாலித்தனமான செயல்படுவீர். இதனால் லாபம் உண்டாகும். செல்வாக்கு உயரும். புதிய இடம், வீடு வாங்கும் முயற்சி வெற்றியாகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

உடல்நிலையில் ஏற்பட்ட பாதிப்பு விலகும். வழக்கு சாதகமாகும். எடுக்கும் வேலைகளில் லாபம் கிடைக்கும்.வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்ட சங்கடம், கோபம் விலகும். வீட்டில் சுபிட்சமான நிலை உண்டாகும். குடும்பத்தில் இருந்த நெருக்கடி நீங்கும். அரசு வழி முயற்சி வெற்றியாகும். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு தேடி வரும். தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியாகும். புதிய வேலையை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பூர்வீக சொத்தில் ஏற்பட்ட பிரச்னை விலகும். பெரியோர் ஆதரவு கிடைக்கும். புதிய இடம் வீடு வாங்கும் முயற்சி வெற்றியாகும். முக்கியமான வேலை இழுபறியாகும். எடுக்கும் வேலைகளில் கவனம் தேவை. உங்களுக்கு எதிராக அவதூறு பரப்ப வாய்ப்பிருப்பதால் அனைத்திலும் கவனம் தேவை. வரவு செலவில் நிதானம் அவசியம். விழிப்புணர்வுடன் பேசவும், உறவுகளை அனுசரித்துச் செல்வதும் நல்லது.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உங்கள் வேலைகளில் குழப்பம் போராட்டம் என ஏற்பட்டாலும், புத்திசாலித்தனம் வெளிப்படும். வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். ஒருசிலர் புதிய வாகனம் வாங்குவீர். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். அரசுவழி வேலைகளில் வெற்றி உண்டாகும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு உயரும். உங்கள் பணியாளர்களுக்கு ஏற்பட்ட பிரச்னையை சரி செய்வீர். எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சூரியன் முயற்சிகளை வெற்றியாக்குவார். இழுபறியாக இருந்த வேலை முடியும். தொழில் புரிவோருக்கு பணியாளர் ஒத்துழைப்பு கிடைக்கும். சேமிப்பு உயரும். உங்கள் முயற்சி வெற்றியாகும். புதிய இடம் வீடு வாங்க எடுத்த வேலைகள் முடிவிற்கு வரும். சுய தொழிலில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். வியாபாரிகளுக்கு பணியாளர் ஒத்துழைப்பு கிடைக்கும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். சேமிப்பு உயரும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உங்கள் தன, குடும்ப, வாக்காதிபதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர். இளைய சகோதரர் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த பணம் வரும். வெள்ளிக்கிழமை விழிப்புடன் செயல்படுவது நல்லது. ராசிநாதன் சுக்கிரனும் லாப கேதுவும், குடும்பத்தில் நிம்மதியை உண்டாக்குவர். வரவை அதிகரிப்பர். அரசியல்வாதிகள் செல்வாக்கை உயர்த்துவர்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்கள் நிலையில் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படும். செல்வாக்கும் அந்தஸ்தும் உயரும்.வேலை, தொழில் மீது அக்கறை அதிகரிக்கும். உடல்நிலை சீராகும். போட்டி, வழக்கு, எதிர்ப்பு என்று இருந்த நிலை மாறும். வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் வரும். சனி ஞாயிறில் கவனம் தேவை. செல்வாக்கு வெளிப்படும். பண நெருக்கடி நீங்கும். எடுக்கும் முயற்சி வெற்றியாகும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இழுபறியாக இருந்த வேலை இந்த வாரம் முடியும். பெரிய மனிதர்கள் ஆதரவு கிடைக்கும். சுக்கிர பகவானால் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். சந்தோஷம் அதிகரிக்கும்.பொன் பொருள் சேரும். தம்பதிக்குள் இணக்கமான நிலை ஏற்படும். எதிர்பார்த்த பணம் வரும். செவ்வாய் புதனில் கவனமாக செயல்படுவது நல்லது. நீண்டநாள் கனவு நனவாகும். வேலைத்தேடி வந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

லாப சூரியனால் வேலை நடக்கும். வியாபாரம் முன்னேற்றம் அடையும். தொடர்ந்து வந்த நெருக்கடி நீங்கும். தேவைக்கேற்ற வருமானம் வரும். பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்கள், அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு உயரும். இடம், வீடு வாங்க மேற்கொண்ட முயற்சி வெற்றியாகும். உங்கள் வேலைகளில் லாபமுண்டாகும். எடுக்கும் முயற்சி வெற்றியாகும். விற்க முயற்சித்தும் விலைபோகாத இடம் விற்பனையாகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

சனிக்கிழமை முதல் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் செவ்வாயால் செய்துவரும் தொழில் முன்னேற்றம் அடையும். புதிய இடம் வீடு வாங்கும் முயற்சி வெற்றியாகும். எதிர்பார்த்த பணம் வரும். வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். வியாபாரம் முன்னேற்றமடையும். உத்தியோகத்தில் இருந்த நெருக்கடி நீங்கும். தம்பதிகள் இருவரும் ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. புதியவர்களிடம் எச்சரிக்கை அவசியம். வியாபாரத்தில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

உங்களைத்தேடி வருவோருக்கு உதவி செய்யக்கூடிய அளவிற்கு உங்கள் நிலை உயரும். கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்பு தேடிவரும். செல்வாக்கு உயரும். எதிர்ப்பு விலகும். உடல்நிலை சீராகும். நேற்றைய கனவு நனவாகும். எடுக்கும் வேலை வெற்றியாகும். வருமானம் திருப்திதரும். இழுபறியாக இருந்த வழக்கு முடிவிற்கு வரும். செலவிற்கேற்ற வருமானம் வரும். வியாபாரம் தொழிலில் ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த நெருக்கடி நீங்கும். கையிலுள்ள பணம் செலவழியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை தூக்கி வெள்ளத்தில் எறிவதற்கு இது நேரமல்ல!

2004 டிசம்பர் சுனாமியே இலங்கை அதன் அண்மைய வரலாற்றில் முகங்கொடுத்த படுமோசமான இயற்கை அனர்த்தமாகும். அடுத்த பெரிய அனர்த்தம் 'டித்வா' சூறாவளியும் அதன் விளைவாக ஏற்பட்ட கடந்த வாரத்தைய வெள்ளப்பெருக்கும் மண்சரிவுகளுமாகும்.

யேமன் நாட்டில் உள்ள வனப்புமிகு ஏரி ஒன்றின் பெயரிடப்பட்ட இந்த சூறாவளியின் விளைவாக நாட்டில் ஏற்பட்ட உயிரிழப்புகளையும் சொத்து அழிவுகளையும் பற்றிய முழுமையான விபரங்களை அறிந்து கொள்வதற்கு பல வாரங்கள் செல்லலாம். ஆனால், இதுவரையில் இறந்தவர்களின் எண்ணிக்கை 600க்கும் அதிகம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய மலைநாட்டில் சில கிராமங்கள் மண்ணுக்குள் முற்றாகவே புதைந்துவிட்டதால் காணாமல் போனவர்களின் சரியான எண்ணிக்கையை ஒருபோதும் அறிய முடியாமலும் போகலாம்.

2004 சுனாமி 40 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்களை பலியெடுத்த போதிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கரையோரப் பகுதிகளை மாத்திரமே தாக்கியது. ஆனால், டித்வா சூறாவளி நாடு முழுவதிலும் அழிவை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகிய ஆசிய நாடுகளும் ஏககாலத்தில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட போதிலும், இலங்கையே படுமோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளத்தினால் சூழப்பட்ட வீடுகளினதும் வாகனங்களினதும் கூரைகளின் மேல் ஏறிநின்ற குடும்பங்களின் அவலக் குரலும் சகதிக்குள் புதைந்த வீடுகளும் நிலைவரத்தின் பாரதூரத்தன்மையை உணர்த்திநின்றன.

உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் பலவற்றினால் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் டிசம்பர் முதலாம் திகதியளவில் செய்யப்பட்ட மதிப்பீடு ஒன்று குறைந்த பட்சம் 80 வீதிகளும் 15 பாலங்களும் மோசமாகச் சேதமடைந்திருக்கின்றன. சுமார் 3 இலட்சம் கட்டிடங்கள் வெள்ளத்தினால் சூழப்பட்டிருந்தன. மின்விநியோக மற்றும் தொலைத்தொடர்பு கட்டமைப்புக்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. சகல 25 மாவட்டங்களிலும் சுகாதார சேவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

முக்கியமான விவசாயப் பிராந்தியங்களில் பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்ட அழிவு முன்னென்றும் இல்லாத வகையிலான உணவுப் பாதுகாப்பின்மை நெருக்கடியை தோற்றுவிக்கப் போகிறது. மரக்கறி வகைகளின் விலைகள் உடனடியாகவே கடுமையாக அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரிக்கவே செய்யும். வாழ்வாதாரத்துக்காக விவசாயத்தை நம்பியிருக்கும் மக்கள் கடுமையான கடன் சுமை மற்றும் வறுமைக்குள் தள்ளப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட விபரங்களின் பிரகாரம் 5 இலட்சத்து 86 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 20 இலட்சத்து 82 ஆயிரத்து 195 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 4 ஆயிரத்து 164 வீடுகள் முழுமையாகவும் 67 ஆயிரத்து 505 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்திருக்கின்றன. மீட்புப்பணிகள் தொடருகின்ற நிலையில் அடுத்துவரும் நாட்களில் பாதிப்புக்கள் பற்றிய மேலும் விபரங்கள் வெளியாகும்.

டித்வா சூறாவளியின் விளைவான பொருளாதார இழப்பு சுமார் 600 -- 700 கோடி அமெரிக்க டொலர்கள் என்றும் சுனாமியினால் ஏற்பட்ட பொருளாதார இழப்பை விடவும் இது மூன்று மடங்கு அதிகம் என்றும் அண்ணளவாக மதிப்பிடப்பட்டிருப்பதாக புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்திருக்கிறார். இயற்கை அனர்த்தத்தின் பின்னரான பொருளாதார மீட்புத் திட்டத்தை வகுப்பதற்காக முழுமையான பொருளாதார இழப்பு விரைவில் மதிப்பிடப்படும் என்றும் அவர் கூறினார்.


2022 பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட ஒப்பீட்டளவிலான பொருளாதார உறுதிப்பாடு ஆட்டங்கண்டிருக்கும் நிலையில், இயற்கை அனர்த்தத்தின் பாதிப்புக்களில் இருந்து மீள்வதற்கான கடுமையான நெருக்கடி மிகுந்த ஒரு காலப்பகுதியை இலங்கை எதிர்நோக்கப் போகிறது.

சர்வதேச சமூகம் தாராளமாக அவசர உதவிகளை அறிவித்திருக்கின்றது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், அரபு நாடுகள் மற்றும் ஆசிய நாடுகள் அவசரகால உதவிகளை வழங்கிவருகின்றன. இலங்கையில் அனர்த்தங்கள் நேருகின்ற வேளைகளில் எல்லாம் உடனடியாக உதவிக்கு ஓடிவரும் இந்தியா அயலகத்துக்கு முன்னுரிமை என்ற பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கையின் பிரகாரம் தற்போது 'கடல் கடந்த நண்பன்" ( சாகர் பந்து) என்ற பெயரில் பரந்தளவிலான மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை முழுவீச்சில் முன்னெடுத்திருக்கிறது.

சூறாவளி இலங்கையை தாக்குவதற்கு முன்னதாகவே இந்தியாவின் விமானந்தாங்கி கப்பல்களான ஐ.என்.எஸ். விக்ராந்தும் உதயகிரியும் கொழும்பு துறைமுகத்துக்கு வந்து தரித்து நின்றதால் மீட்புப் பணிகளுக்கு பெரும் உதவியாக அமைந்தது. பிறகு இந்தியாவின் சுகன்யா என்ற இன்னொரு கப்பலும் இந்த பணிகளில் இணைந்துகொண்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரணமாக பெருமளவு இழப்பீடுகளை ஜனாதிபதி அநுரா குமார திசநாயக்க அறிவித்திருக்கிறார். ஆனால், சூறாவளி அபாயம் குறித்து முன்னதாகவே எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், பாதிப்புக்களை குறைப்பதற்கு தேவையான அவசர நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதற்காக அரசாங்கம் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

> **அண்மைய தசாப்தங்களில் கிரமமான முறையில் மாறிமாறி எம்மைத் தாக்கிய வரட்சியும் வெள்ளப்பெருக்கும் காலநிலை மாற்றத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுவரும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்ற அச்சந்தரும் உண்மையை உணர்த்தி நிற்கின்றன.**





நவம்பர் 12 ஆம் திகதி தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற வளிமண்டலவியல் திணைக்களத்தின் இயக்குநர் நாயகம் அத்துல கருணாநாயக்க, இலங்கை எதிர்நோக்கப் போகின்ற இயற்கை அனர்த்தம் குறித்து எச்சரிக்கை செய்திருந்தார். பிரத்தியேகமாக காலநிலை குறித்து ஆராயப்பட்ட அந்த ஒன்றரை மணி நேர நிகழ்ச்சியில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இயக்குநர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொடவும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர் இமாயா ஆரியரத்னவும் பங்கேற்றிருந்தனர்.

வளிமண்டலவியல் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வருகின்ற அதேவேளை, அந்த அமைச்சு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் நெருக்கமாகப் பணியாற்றிவருகிறது. பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியே இருக்கிறார். வளிமண்டலவியல் திணைக்களமும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் இயற்கை அனர்த்த ஆபத்து குறித்து உடனடியாக உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியின் கவனத்துக்கு ஏன் கொண்டுவரவில்லை என்ற கேள்வி எழுகிறது.

அமெரிக்க காலநிலை நிறுவனமும் பி.பி.சி.யும் இலங்கையை சூறாவளி தாக்கக்கூடும் என்று நவம்பர் 12 ஆம் திகதி எச்சரிக்கை விடுத்த அதேவேளை அல் - ஜசீராவும் நவம்பர் 14 ஆம் திகதி அதே போன்ற எதிர்வுகூறலைச் செய்தது. ஆனால், வளிமண்டலவியல் திணைக்களமும் புவியியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்கப் பணியகமும் சூறாவளி குறித்த எச்சரிக்கையை அது இலங்கையை தாக்கிய தினத்துக்கு முதல் நாள் (நவம்பர் 26) மாத்திரமே அறிவித்தன.

இயற்கை அனர்த்தத்தை எவராலும் தடுக்க முடியாது. ஆனால், முன்கூட்டியே எடுக்கக்கூடிய நடவடிக்கைகளின் மூலமாக அனர்த்தத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைக்க முடியும். அதற்கான தயார் நிலையில் அரசாங்கம் இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

அவசரகாலநிலையைக் கூட எதிர்க்கட்சி தலைவர் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்த பின்னர் மாத்திரமே ஜனாதிபதி பிரகடனம் செய்தார்.

எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், பாதிப்புக்களை குறைக்கக்கூடிய முன்கூட்டிய அவசர நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கத் தவறியது குறித்து மரணங்களுக்கும் அழிவுகளுக்கும் பிறகு குற்றஞ்சாட்டுகின்ற எதிரணி கட்சிகள் நேரவிருந்த ஆபத்துக் குறித்து ஏன் அரசாங்கத்தை உஷார்ப் படுத்தவில்லை என்பது இன்னொரு முக்கியமான கேள்வி.

நாடு வெள்ளத்தில் மூழ்கியிருந்த வேளையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச நிலைவரத்தைக் கையாளமுடியாவிட்டால் ஆட்சிப்பொறுப்பை தங்களிடம் ஒப்படைக்குமாறு அரசாங்கத்தை பார்த்துக் கேட்டார். கடந்த ஒரு மாதகாலமாக பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2026 பட்ஜெட்டை மீளப்பெற்றுக்கொண்டு புதிய பட்ஜெட் ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்த அவர், சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய கடனுதவித் திட்டத்தை இனிமேலும் நடைமுறைப்படுத்த முடியாது என்பதால் புதிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அதேவேளை, சூறாவளிக்கு எதிராக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கத் தவறியதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

பட்ஜெட் விவாதத்தின் இறுதி நாளன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் முன்னாள் ஜனாதிபதிகளை அழைத்து ஆலோசனைகளைப் பெற்று இயற்கை அனர்த்தத்தின் பாதிப்புக்களில் இருந்து நாட்டை மீட்பதற்கான திட்டங்களை வகுக்குமாறு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறினார்.

முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவர் சுனாமி நிவாரணத்துக்காக வெளிநாடுகள் அனுப்பிய நிதியை தனது சொந்த வங்கி கணக்கில் வைப்பிலிட்டார் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டவர். அவரை அந்த வழக்கில் இருந்து விடுவித்த பிரதம நீதியரசர் ஒருவர் பிறகு ஒரு கட்டத்தில் அதற்காக மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார். இன்னொரு ஜனாதிபதி முன்கூட்டியே தகவல்கள் கிடைத்த போதிலும் 2019 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு உகந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று உயர்நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்ட பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதியத்துக்கு பத்துக் கோடி ரூபா செலுத்தினார்.

இன்னொரு ஜனாதிபதி அவரது தவறான ஆட்சிமுறைக்கு எதிராக மூண்ட மக்கள் கிளர்ச்சியை தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறினார். மற்றைய முன்னாள் ஜனாதிபதிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து அனர்த்தங்களின் பாதிப்புக்களில் இருந்து மக்களை பாதுகாத்ததாக வரலாறு கிடையாது. இந்த இலட்சணத்தில் அவர்களால் அரசாங்கத்துக்கு எத்தகைய ஆலோசனைகளை வழங்க முடியும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நினைக்கிறாரோ தெரியவில்லை.

இவை எல்லாவற்றுக்கும் ஒருபடி மேலே சென்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெள்ளப்பெருக்கை தடுப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை தவறியது அரசியலமைப்பை மீறிய செயல் என்று குற்றஞ்சாட்டி அவர்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியும் என்று கூறியிருக்கிறார். உயிர்வாழ்வதற்கான மக்களின் உரிமையை உத்தரவாதம் செய்யும் அரசியலமைப்பை அவர்கள் மீறியதாக அவர் கூறுகிறார். அதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது முன்னாள் ஜனாதிபதிகளில் எவரை உயர்நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியாது என்று விளங்கவில்லை.

இடர்பாட்டில் இருந்து நாட்டை மீட்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக எதிரணி கட்சிகளின் தலைவர்களிடமிருந்து வருகின்ற அறிவிப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தலைவர்களுக்கு ஆட்சிமுறையில் அனுபவமில்லை என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்ட தொனியில் அமைந்திருப்பதை அவதானிக்கக்கூடியதாக

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேரிடர் காலத்தில் அவசியமானது அரசியல் ஞானமே தவிர, வழமையான கட்சி அரசியல் அல்ல.



கலாநிதி ஜெகான் பெரேரா

சூறாவளி ஏககாலத்தில் தாக்கிய நான்கு ஆசிய நாடுகளில் இலங்கை ஒன்று. இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் பல பாகங்கள் சூறாவளியின் விளைவான மழையினால் பாதிக்கப்பட்ட அதேவேளை, இலங்கை வேறு ஒரு சூறாவளி தாக்கியது என்று சர்வதேச ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன. இலங்கையை விடவும் பெருமளவுக்கு கிரமமாக சூறாவளியினால் பாதிக்கப்படுகின்ற அந்த நாடுகளில் கூட, இறந்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கை எட்டியது. இறந்தவர்களின் எண்ணிக்கை 390. அதேயளவு எண்ணிக்கையானோர் காணாமல்போயினர். இதுவரையில் சென்றடைய முடியாமல் இருக்கும் பகுதிகளுக்கு மீட்புப் பணியாளர்கள் செல்லக்கூடிய நிலைமை வரும்போது இறந்தவர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

'டித்வா' சூறாவளி இலங்கைக்கு ஏற்படுத்திய அழிவுகளின் முழுமையான அளவு இன்னமும் தெரியவில்லை. 20 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் நிர்மூலம் செய்யப்பட்டிருப்பதாக ஆரம்பக்கட்ட மதிப்பீடுகள் கூறுகின்றன. 200 க்கும் அதிகமான வீதிகள் பயணம் செய்யமுடியாதவையாக இருக்கின்றன. குறைந்தபட்சம் 10 பாலங்கள் சேதமடைந்திருக்கின்றன. ரயில்வே கட்டமைப்புகளில் பல பிரிவுகளும் தேசிய மின்சாரக் கட்டமைப்பும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

2004 சுனாமி போன்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நாட்டின் ஒரு பாகத்தை தாக்கிய இயற்கை அனர்த்தங்களைப் போலன்றி, இந்த சூறாவளி முழு நாட்டையுமே தாக்கியிருக்கிறது. சூறாவளியின் விளைவான அழிவுகள் எதிர்பார்க்கப்படுகின்ற பொருளாதார மீட்சி மீது பாரிய தாக்கத்தைக் கொண்டிருக்கப்போகிறது என்பது பெரும் கவலைக்குரியது. இலங்கை கொண்டிருப்பதற்கு அப்பால் வளங்கள் தேவைப்படும். பெருந்தன்மை குறைந்ததாக மாறிவிட்ட - மோதல்கள் நிறைந்த ஒரு உலகில் இலங்கைக்கு பாரியளவில் உதவிகள் தேவைப்படும்.

இந்தியா உடனடியாக உதவிக்கு ஓடிவந்ததற்கு இலங்கையின் வெளியுறவுக் கொள்கைச் சாதனை காரணமாகும். நட்புறவு விஜயமாக வருகைதந்து இலங்கைக் கடலில் தரித்து நின்ற இந்தியாவின் விமானம் தாங்கிக் கப்பல் ஒன்று உடனடியாக மீட்புப் பணிகளில் இறங்கியது. தவறான முகாமைத்துவம் மற்றும் ஊழல் காரணமாக 2022 ஆம் ஆண்டில் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டபோது உதவிக்கு ஓடிவந்ததைப் போன்று சூறாவளியின் விளைவான மனித அவலத்தை தணிப்பதற்கும் இந்தியாவே முதலில் செயலில் இறங்கியது.

இதற்கு மேலதிகமாக, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளும் நிவாரணங்களுக்காக நிதியுதவியை வழங்கியிருக்கின்றன. நேபாளம் கூட பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கியிருப்பதற்கு மத்தியிலும், நன்கொடையாக நிதியை வழக்கியிருக்கிறது. வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் ஒன்று வந்திருக்கிறது. சேதங்களை மதிப்பிடுவதற்கும் நீண்டகால அடிப்படையிலான புனரமைப்புக்கான தந்திரோபாயங்களை வகுப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு உதவுவதற்கும் ஜப்பான் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைத்திருப்பது நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருக்கிறது.

சீன செஞ்சிலுவைச் சங்கம் நன்கொடையை வழங்கியிருக்கிறது. அதை தொடர்ந்து சீனாவின் உத்தியோகபூர்வ உதவிகள் வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய இராச்சியமும் உதவியளிக்க முன்வந்திருக்கிறது. ஊழலை ஒழித்துக் கட்டுவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் பற்றுறுதியில் இலங்கை மக்களும் சர்வதேச சமூகமும் கொண்டிருக்கும் நம்பிக்கை நாட்டுக்கு நன்றாக உதவும் என்பதில் சந்தேகமில்லை. இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு 'மார்ஷல் திட்டம்' ஒன்றை வகுக்குமாறு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுப்பதற்கான அடிப்படையை அந்த நம்பிக்கை வழங்கக்கூடும்.

பேரிடரின்போது ஓரிரு நாட்களுக்குள் பெரும் எண்ணிக்கையான தொண்டர் குழுக்கள் தோன்றியது இன்னொரு நேர்மறையான அம்சமாகும். இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவளிப்பதற்காக நாடுபூராவும் சமூக உணவு நிலையங்கள் தோன்றியிருக்கின்றன. இடம்பெயர்ந்தவர்களின் தொகை ஒரு இலட்சத்துக்கும் அதிகமானதாகும். அவர்களுக்கு பொதுமக்கள் உதவி வருகிறார்கள். பணமாக, உணவாக, உலர் உணவு வகைகளாக அந்த உதவிகள் வந்து கொண்டிருக்கின்றன. விநியோகங்களை ஏற்றிச் செல்வதற்கு தங்களது சொந்த வாகனங்களைக் கூட அந்த மக்களில் பலர் கொடுத்து உதவுகிறார்கள். கடும் வேகத்தில் வீசும் காற்றையும் பொருட்படுத்தாமல் மின்சார திருத்தவேலைக் குழுக்கள் உயிரையும் துச்சமாக மதித்து மின்கம்பங்களில் ஏறி இணைப்புக்களை மீண்டும் கொடுப்பதை சமூக ஊடகங்களில் வெளியாகும் காணொளிகளின் மூலம் காணக்கூடியதாக இருக்கின்றது.

பாய்ந்துவரும் வெள்ளத்தில் தங்களுக்கு ஏற்படக்கூடிய உயிராபத்தையும் பொருட்படுத்தாமல் பாதுகாப்பு படையினர் வீடுகளுக்குள் நிராதரவாக நிற்கும் மக்களை மீட்பதை மற்றைய காணொளிகள் காட்டுகின்றன. இந்த பணிகளின்போது படையினரில் ஆறு பேர் இதுவரையில் தங்களதுஉயிர்களை தியாகம் செய்திருக்கிறார்கள். இந்த சேவையும் அர்ப்பணிப்பும் கட்சி அரசியல் இப்போதும் கூட ஆழமாக்க நாட்டம் கொண்டிருக்கும் பிளவுகளை வெற்றி கொண்ட அதிவிசேடமான ஒருமைப்பாட்டு உணர்வு வெளிக்காட்டப்பட்ட முன்னைய வரலாற்று தருணங்களை நினைவுபடுத்துகின்றன.

ஆனால், இந்த தடவை நெருக்கடியின் பரிமாணம் தேசிய அரசியல் சமுதாயத்தின் மீது ஒன்றுபடுத்தும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும். இது எதிரணிக் கட்சிகளிடம் இருந்து ஆலோசனையையும் ஒத்துழைப்பையும் நாடுவதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கத்துக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. பேரிடரை எவ்வாறு கையாளுவது என்பது குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க எதிரணிக் கட்சிகளை அழைத்தார்.

நாடு எதிர்நோக்கும் நெருக்கடியின் பாரதூரத்தன்மையை பற்றிய உணர்வுடன் நடந்த அந்த கூட்டத்தில் நிலைவரம் பற்றி விளக்கமளித்த ஜனாதிபதி, எதிர்க்கட்சிகளின் தலைவர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை அக்கறையுடன் அவதானித்தார். அரசாங்கத்துக்கு எதிரணிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் பெரும்பாலும் பகைமையுணர்வுடனானவையாக இருக்கின்ற இது வழமையான போக்கிற்கு முற்றிலும் முரணானதாக இருந்தது. தற்போதைய சூழ்நிலையில், முன்னென்றும் இல்லாத வகையில் நாட்டின் சகல பாகங்களையும் பாதித்திருக்கும் நெருக்கடியை கையாளுவதற்கு அரசியல் ஐக்கியம் ஒன்றை உருவாக்குவதற்கு ஜனாதிபதி பாடுபடுகிறார்.

முன்னென்றும் இல்லாத வகையிலான ஒரு நடவடிக்கையாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்து உதவிகளை வழங்குமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டதுடன் பேரிடரை கையாளுவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான அதிகாரங்களை கொண்டிருப்பதற்காக அவசரகாலநிலையைப் பிரகடனம் செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். ஜனநாயக சுதந்திரங்களை கட்டுப்படுத்துவதற்கு துஷ்பிரயோகம் செய்யப்பட்ட காரணத்தினால் அவசரகாலநிலை அதிகாரங்களை அரசாங்கம் நாடுகின்ற சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சிகள் கண்டனம் செய்வதே வழமையாகும்.

அத்தகைய அதிகாரங்களைப் பெறுவதற்கு அரசாங்கத் தரப்பில் காண்பிக்கப்பட்ட தயக்கம் அவசரகாலநிலை அதிகாரங்களைப் பற்றி அதற்கு இருக்கும் ஐயப்பாடுகளை பிரதிபலிக்கிறது. அவசரகால ஒழுங்குவிதிகளை முன்னைய அரசாங்கங்கள் தவறாகப் பயன்படுத்தியதை குற்றஞ்சாட்டியே பல வருடங்களைக் கழித்த அனுபவம் இன்றைய அரசாங்க தலைவர்களுக்கு இருக்கிறது. மக்களை [illegible] பு நடவடிக்கைகளை பயனுறுதியுடைய முறையில் முன்னெடுக்க வசதிசெய்வதற்கு மாத்திரமே அவசரகால நிலை அதிகாரங்கள் பயன்படுத்தப்படும் என்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி உறுதியளித்தார்.

ஜனாதிபதியையும் நெருக்கடியைக் கையாளுகின்ற உயர்மட்ட அரசாங்க குழுவையும் சந்திப்பதற்கு சிவில் சமூக அமைப்புகளுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு இன்னொரு நேர்மறையான நடவடிக்கையாகும். அனர்த்தத்தை வெற்றி கொள்வதற்கு சகல தேசிய ஆற்றல்களையும் பயன்படுத்துவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் விருப்பத்தின் ஒரு அறிகுறியாக இந்த அழைப்பை கருதமுடியும். நெருக்கடியை அரசாங்கம் எவ்வாறு நோக்குகின்றது என்பதைப் பற்றிய உள்நோக்கை அந்த சந்திப்பு சிவில் சமூக அமைப்புக்களுக்கு வழங்கியது. சந்திப்பில் ஜனாதிபதி தற்போதைய நிலைவரம் பற்றிய மதிப்பீட்டை முன்வைத்தார். ஒட்டுமொத்த நிலைவரத்தையும் பற்றிய அவரது விளக்கப்பாட்டை அந்த மதிப்பீடு வெளிக்காட்டியது. தொலைத்தொடர்புகளின் சீர்குலைவு, பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்றடைவதில் உள்ள சிக்கல்கள், உட்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் நிலைவரத்தைக் கையாளுவதற்கான அரசாங்கத்தின் திட்டம் என்று பல்வேறு விடயங்களைப் பற்றியும் ஜனாதிபதி பேசினார்.


சந்திப்புக்கு வாய்ப்பைத் தந்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், முன்னைய அவசரகால நிலைமைகளின்போது தாங்கள் செய்த பங்களிப்புகளை நினைவுபடுத்தினர். ஏற்கெனவே பல சிவில் சமூக அமைப்புகள் களத்தில் பணியில் இறங்கியிருப்பதையும் நிதியுதவிகள் ஊடாக மாத்திரம் அல்ல, அனுபவங்கள், நிபுணத்துவம் மற்றும் உள்ளூர் கட்டமைப்புகள் ஊடாகவும் பல்வேறு அளவுகளில் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கப்படுவதையும் ஜனாதிபதிக்கு அவர்கள் எடுத்துக்கூறினர். தேசிய மட்டத்தில் ஒருங்கிணைப்பும் தகவல் பகிர்வும் பயனுடையவை என்று கூறிய பிரதிநிதிகள் பொருத்தமான பொறிமுறைகளில் சிவில் சமூக அமைப்புக்களை உள்ளடக்குவது தொடர்பில் மாவட்ட மற்றும் பிரதேச அதிகாரிகளுக்கு தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியை கேட்டுக்கொண்டனர்.

அனர்த்த நிவாரண நடவடிக்கைகள் தொடர்பிலான அரசாங்கத்தின் சகல தொடர்பாடல்களும் சிங்களத்திலும் தமிழிலும் இருப்பதை உறுதிசெய்ய வேண்டிய தேவை குறித்து ஜனாதிபதியுடனான சந்திப்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர். அரசாங்க நிறுவனங்கள் சிங்கள மொழியில் மாத்திரம் தகவல்களை வெளியிடும் நடைமுறை அரசாங்க முறைமைக்குள் ஆழமாக வேரூன்றிய ஒன்றாகும். அதை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும். தற்போதைய அரசாங்கம் பாகுபாடு இல்லாமல் சகல குடிமக்களுக்குமானது என்பதையும் சகல சமூகங்களையும் ஒன்றுபடுத்தக்கூடிய வகையில் நிவாரண நடவடிக்கைகள் கையாளப்படும் என்பதையும் காண்பிப்பதற்கு தற்போதைய சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டுமென்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் கூறினர்.

அரசாங்கத்துடன் எவ்வாறு பணியாற்றுவது என்பதையும் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதையும் சிவில் சமூக அமைப்புக்கள் சுதந்திரமாக தீர்மானிக்க முடியும் என்று ஜனாதிபதி அளித்த உத்தரவாதம் அவருடனான பேச்சுவார்த்தையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். அரசாங்க நிருவாகத்தின் விளக்கப்பாடு வேறுவகைப்பட்டதாக இருக்கிறது போன்று தெரிகிறது. மாவட்டங்களில் செயற்படுகின்ற அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படுகின்ற சகல நடவடிக்கைகளும் அந்தந்த மாவட்டத்தின் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவன ஒருங்கிணைப்பாளரின் ஊடாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று அரசாங்க நிருவாகம் மாவட்டச் செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பியிருக்கிறது.

மாவட்ட மட்டத்தில் உள்ள அதிகாரிகள் நிவாரண நடவடிக்கைகளை வழிநடத்துவதற்கு மிகவும் பொருத்தமானவர்கள். சகல தகவல்களையும் விபரங்களையும் பெறக்கூடியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். ஒருங்கிணைப்புக்கான தேவை நிச்சயமாக இருக்கிறது. ஆனால், அது கட்டுப்படுத்தும் வகையிலானதாக அன்றி, கலந்தாலோசனையின் வடிவிலானதாக இருக்க வேண்டியது அவசிய

(14ஆம பக்கம பாரக்க)



சூறாவளியின் விளைவான நெருக்கடி ஐக்கிய உணர்வை வேண்டிநிற்கிறது. அந்த உணர்வுக்கு கெடுதி விளைவிப்பதாக கட்சி அரசியல் போட்டி அமைந்துவிடக்கூடாது. அதனால், அரசியல் பிளவின் இரு மருங்கிலும் அரசியல் ஞானம் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் இடர் தடகளத்தில் நல்லது கெடுவதும், நன்மையாவதும்!

பனங்காட்டான்



இயற்கையின் பெருஞ்சீற்றம் இரத்தினதுவீபம் என அழைக்கப்பட்டு வந்த இலங்கை எனும் குட்டித் தீவை முற்றுமுழுதாக சீரழித்துள்ளது.

75 வருட அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக ஓர் அணி - புரட்சிகர சிந்தனையாளர்களின் ஆட்சி ஆரம்பமாகி ஒரு வருட முடிவு காலத்தில் இவ்வாறான ஒரு பேரழிவை கையாளக்கூடியதாக திட்டமிடவில்லையென்பதை உள்நாட்டில் பலரும் கூறுமளவுக்கு நிலைமை உள்ளது.

அரச நிர்வாகத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஒன்று உள்ளது. இது நேரடியாக ஜனாதிபதி அநுர குமரவின் தலைமையில் இயங்குகிறது. இந்த அமைச்சின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் உள்ளது. இதற்கான சட்டம் 2005ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டத்திலும் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு, பூகம்பம், சுனாமி உட்பட்ட பதினேழு வகையான அனர்த்த வேளைகளில் உடனடிப் பணிகளை நிறைவேற்றுவதே இந்த நிலையத்தின் பிரதான பணி.

*1913, 1940, 1947, 1950*ம் ஆண்டுகளில் களனி, கல, ஜின், மகாவலி கங்கைகள் பெருக்கெடுத்து பாரிய அழிவை ஏற்படுத்தின. பின் நவீனத்துவ காலத்தில் 2003ம் ஆண்டில் தெற்கு மற்றும் தென்மேற்கு மாவட்டங்களில் ஏற்பட்ட அனர்த்தத்தில் 260 பொதுமக்கள் கொல்லப்பட்டதையும், ஆயிரமாயிரம் பேர் இடம்பெயர்ந்ததையும் அரசாங்கத் தகவல் பதிவு செய்துள்ளது. 1978ம் ஆண்டு சூறாவளி இலங்கை மக்களை வேறுபாடின்றி எதிர்பாராத அழிவுக்குள்ளாக்கியது.

இதன் பின்னரான பேரழிவை ஏற்படுத்தியது நேற்றுப்போல் இடம்பெற்ற சுனாமி. 2004 டிசம்பர் 26ம் திகதியான கிறிஸ்மஸ் நாளன்று இது இடம்பெற்றது. மின்னாமல் முழங்காமல் என்று கூறுவதுபோன்று இலங்கை வரலாற்றில் எதிர்பார்த்திராத அனர்த்தத்தை இது ஏற்படுத்தியது. வடக்கின் கரையோரத்திலிருந்து இலங்கை வரைபடத்தின் கீழ்மூலையிலுள்ள அம்பாந்தோட்டை வரையான கரையோர பிரதேசங்களில் ஆறு மணித்தியாலத்தில் பல்லாயிரம் பேரை கொன்றொழித்த பேரலை இது. மக்களின் இருப்பிடங்கள், தொழிலகங்கள், வணக்கத் தலங்கள், வாழ்வாதார மூலங்கள், பாடசாலைகள், விவசாயப் பண்ணைகள் என்று எதனையுமே இது விட்டுவைக்கவில்லை.

இலங்கை அரசியலில் இதே சுனாமி சிலரை அடையாளம் காட்டவும் வைத்தது. அப்போது சந்திரிகா குமாரதுங்க தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தது. ஜே.வி.பி. இதில் பங்காளராக அமைச்சுப் பதவிகளிலும் அமர்ந்திருந்தது. அநுர குமர, விஜித ஹேரத் போன்றவர்கள் அமைச்சர்களாக இருந்தனர். சுனாமி நிவாரணத்துக்காக பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை நிதி வழங்கிய நாடுகள் சந்திரிகாவுக்கு ஏற்படுத்தின. அவரும் அதனை ஏற்றுக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் இணைந்து கட்டமைப்பை உருவாக்க முனைந்த வேளை அதனை ஆட்சேபித்த ஜே.வி.பி. தங்கள் அமைச்சுப் பதவிகளையும் துறந்து ஆட்சிக் கூட்டிலிருந்து வெளியேறியது. பொதுக்கட்டமைப்பில் விடுதலைப் புலிகளையும் இணைப்பதால் அவர்களுக்கு அரசியல் அங்கீகாரம் கிடைத்துவிடும் என்பதே ஜே.வி.பி.யின் எதிர்ப்புக்கு காரணமாகக் கூறப்பட்டது.

இது தொடர்பாக இலங்கையிலிருக்கும் அமெரிக்க தூதரகம் தனது அரசுக்கு அனுப்பி வைத்த தகவல் விக்கி லீக்சில் இடம்பெற்றுள்ளது. அப்போது சந்திரிகா அரசில் கலாசார மற்றும் மரபுரிமை அமைச்சராகவிருந்த விஜித ஹேரத் (தற்போதைய வெளிவிவகார அமைச்சர்) இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில், ஆட்சியின் பங்காளர்களான தங்களின் ஆட்சேபணையை பொருட்படுத்தாது சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளை பொதுக்கட்டமைப்பில் சேர்த்துக் கொள்ள முடிவெடுத்தார் என்று குறிப்பிட்டதாக விக்கி லீக்ஸ் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

விதிப்பயனோ அல்லது இயற்கையின் நியதியோ சுனாமியிலும் பார்க்க மிகமிக மோசமான பேரழிவை ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி நாட்டை ஆட்சி புரியும் காலத்தில் ஏற்பட்டுள்ளது. தமது வல்லமைக்கு உட்பட்ட வகையிலும் கிடைக்கும் சர்வதேச உதவிகளைப் பயன்படுத்தியும் நாட்டை மீளெழுப்ப அரசு செயற்களத்தில் இறங்கியுள்ளது. அதேசமயம். புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர் உதவியை இது பகிரங்கமாகக் கோரியுள்ளது.

புலம்பெயர் இலங்கையர்கள் என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும், இவர்களுள் பெரும்பான்மையானவர்கள் தமிழர்களே. தமிழ் மக்களினுடைய உரிமைப் போராட்டத்தை நசுக்க போர் வெறி கொண்ட மகிந்த அரசுக்கு பக்கபலமாக அப்போது நின்றது ஜே.வி.பி. சுனாமிக் கட்டமைப்பில் விடுதலைப் புலிகளை

> **2004ம் ஆண்டு சுனாமி நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகளையும் இணைத்து செயற்பட சந்திரிகா அரசு முனைந்தபோது அதனை ஆட்சேபித்து அமைச்சர் பதவிகளையும் துறந்து ஆட்சியிலிருந்து வெளியேறியது ஜே.வி.பி. இருபது ஆண்டுகளின் பின்னர் பேரிடர்ப் பணிபுரிந்து நாட்டைக் கட்டியெழுப்ப புலம்பெயர்ந்த மக்களிடம் (தமிழர்களே அதிகம்) உதவியை நாடுகிறது அதே ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி. இதுவும் இயற்கையின் நியதி போலும்.**

சந்திரிகா இணைத்துக் கொள்ள முயன்றபோது அதனை எதிர்த்து முறித்தழித்ததும் இதே ஜே.வி.பி. இப்போது, போரினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகப் புறப்பட்ட தமிழர்களின் உதவியை இது நாடி நிற்கிறது. இன மத மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் உள்நாட்டில் அநுர அரசு மேற்கொள்ளும் பணிகள் வெளிநாடுகளில் இதன் மீதான நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

இந்த நம்பிக்கையின் பயனாகவே உலகநாடுகள் அனைத்தும் கிள்ளிக்கொடுக்காமல் இலங்கைக்கு அள்ளிக் கொடுக்கின்றன. இன்றைய கால கட்டத்தில் வேறொரு கட்சியின் ஆட்சி இலங்கையில் இருந்திருக்குமாயின் இந்த ளவுக்கு சர்வதேச ஆதரவு கிடைத்திருக் காது என்று சொல்லலாம். இதற்குக் காரணம் ஊழல் ஒழிப்பில் முழுமையாக இறங்கி ஊழலற்ற அரசாட்சி ஒன்றை நோக்கி தேசிய மக்கள் சக்தி அரசு பயணிப் பதே என்று துணிந்து சொல்லக்கூடிய தாக இருக்கிறது.

ஒரு வருட ஆட்சிக்குள் அநுர குமர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இன, மத பேதமற்ற நிர்வாகமாக முழுமையாக மாறவில்லை. பொதுமக்கள் நம்பக்கூடிய வகையில் தனது பாதையை இவ்வழியில் அது அமைத்து வருவது மட்டும் தெரிகிறது. இந்த நம்பிக்கையே சர்வதேசத்தின் பங்களிப்புக்கு அடிப்படைக் காரணம்.

அனைத்து மக்களையும் இணைத்தவாறு நாட்டை இழுத்துச் செல்ல முயற்சித்த வேளையில் புயலும், வெள்ளமும், நிலச்சரிவும் ஒன்றுசேர்ந்து அனைத்தையும் புரட்டிப் போட்டுள்ளது. மரணித்தோர் தொகை அடுத்த சில நாட்களில் ஆயிரத்தைத் தாண்டலாம் என எதிர்வு கூறப்படுகிறது. காணாமல் போனோர் தொகை பற்றி இப்போது எதுவும் கூறமுடியாத நிலை காணப்படுகிறது.

மலையகமே கூடுதலான பாதிப்பைக் கண்டுள்ளது. சில கிராமங்கள் அடியோது காணாமல் போயுள்ளன. துயில் கொண்டிருந்த பல குடும்பங்கள் புதையுண்டு போயுள்ளன. உடனடியாக தங்கள் தொகுதிகளுக்குச் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டிய மக்கள் பிரதிநிதிகள், நாடாளுமன்ற வரவு செலவு விவாதத்தை முக்கியப்படுத்தி கொழும்பில் தங்கி விட்டனர். அத்துடன், அரசாங்கத்தின் செயற்பாடுகளை குறை கூறி ஊடகங்கள் ஊடாக தங்கள் செல்வாக்கை அதிகரிக்க முற்பட்டனர். தமிழ் அரசியல்வாதிகளும் இதில் வேறுபடவில்லை.

இந்தியா, சீனா, அமெரிக்கா உட்பட உலக நாடுகள் தாராளமாக உதவி வருகின்றன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இருபத்தையாயிரம் முதல் ஐம்பதினாயிரம் ரூபா வரையான நிவாரணம் மூன்று மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த நிவாரணம் உடனடித் தேவைகளுக்கு மட்டுமே. பிரதேச வேறுபாடின்றி சகலருக்கும் நிவாரணம் வழங்கப்படுவதை காணமுடிகிறது.

எனினும், எதிர்க்கட்சிகள் தாங்கள் நல்லவற்றுக்கும் எதிரானவர்களே என்பதைக் காட்டும் பாணியில் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். ஆக்கபூர்வமான பணிகள் எதனையும் இவர்கள் செய்வதாகத் தெரியவில்லை. பேரிடரைப் பயன்படுத்தி தங்கள் வாக்கு வங்கியை நிரப்பலாமென எண்ணிச் செயற்படும் இவர்களை சர்வதேசம் கேள்விக்குறியாக்கியுள்ளது. நித்தம் நித்தம் கிடைத்துவரும் நிவாரண உதவிகள் எதிரணிகளை நிலைகுலைய வைக்கிறது. அதனால் ஏதாவது குற்றங்களை கண்டுபிடிக்க பூதக்கண்ணாடிகளுடன் இவர்கள் திரிகிறார்கள்.

நிவாரண திட்டமிடலின்மை, தாமதமான நிவாரணப்பணி என்பவைகளை முன்னிறுத்தி ஆட்சித் தரப்பை மக்கள் செல்வாக்கிலிருந்து இறக்கி விடலாமென இவர்கள் எண்ணியது தலைகரணமாக்கியுள்ளது, சர்வதேச நிவாரணமும் அரசாங்கத்தின் வீச்சான செயற்பாடும்.

மறுபுறத்தில், ஆட்சி புரியும் தேசிய மக்கள் சக்தி அனைத்து மக்களையும் ஒரே நோக்கில் இருத்தி தனது பணிகளை மேற்கொள்கிறது. அரசியல் ஆதாயம் தேடப்படுவதாக இதனை எவரும் பார்க்கவில்லை. பேரிடரிலிருந்து நாட்டை மீட்டு அதனை நவீன இலங்கையாக கட்டியெழுப்ப காலம் தேவையென்று கூறி பொதுத்தேர்தலை குறைந்தது பத்தாண்டுகளுக்காவது பின்போட (ரில்வின் சில்வாவின் ஆசையும் இதுதான்) தேசிய மக்கள் சக்திக்கு இதன் நிவாரணப்பணி வரப்பிரசாதமாக அமையலாம். மாகாண சபைத் தேர்தல் பற்றி இப்போதைக்கு எவரும் வாய் திறக்க முடியாத நிலைமை வந்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி பேரிடர் காலத்தில் மேற்கொள்ளும் சாதகமான செயற்பாடுகளும், எதிர்க்கட்சிகளின் இயக்கமற்ற குற்றக் கூச்சல்களும் நாட்டின் எதிர்காலம் எதுவாகும் என்பதை தீர்மானிக்கப்போகும் சக்திகள். இதில் சர்வதேசத்தின் பங்கு முக்கிய இடத்தை வகிக்கும் - புலம்பெயர்ந்தவர்களின் பங்கும்கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தின் ஒரு பாதி மண்ணுக்குள் புதைந்த சோகம்!


ரஞ்சன் அருண்பிரசாத்


'பெரிய சத்தமொன்று வந்தது. நான் கதவை திறந்தேன். கதவை திறந்தவுடன் பூகம்பம் போல தோன்றியது. ஒரு வீடு அப்படியே உள்ளே புதையுண்டது. அந்த வீடு உள்ள போனதை நான் கண்ணால கண்டேன்' என இலங்கை கண்டியில் நிகழ்ந்த மண்சரிவிலிருந்து இறுதி நொடியில் உயிர் தப்பிய ரஷிம் எம்மிடம் தெரிவித்தார்.


அலவத்துகொடை நகரில் அமைந்துள்ள ரம்புக்கேஹெல்ல மலை கிராமத்தில் கடந்த 29ம் திகதி இரவு பாரியதொரு மண்சரிவு சம்பவம் ஏற்பட்டது. இதில் பலர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"நாங்கள் உடனே வெளியில் வந்தோம். நாங்கள் பள்ளிக்கு அருகில் வந்தவுடன்தான் ஆகப் பெரிய மண்சரிவொன்று வந்தது. பெரியதொரு மண்சரிவு அது. பெரியதொரு சத்தம் கேட்டது. என்னுடைய வீட்டை கட்டி நான்கு மாதம் தான் ஆனது. என்னுடைய லாரி வாகனம் எல்லாம்

## நிலச்சரிவால் சுற்றுப்புறத்தில் இருந்து துண்டிக்கப்பட்ட கிராமம்!!







போய்ட்டது." என்று ரஷிம் கூறினார்.

ரம்புக்கேஹெல்ல கிராமமானது, முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரு மலைப் பகுதியாகும். கண்டி - மாத்தளை பிரதான வீதியின் அலவத்துகொடை நகர் பகுதியிலிருந்து சுமார் 7 கிலோமீட்டர் தொலைவிலேயே இந்த கிராமம் அமைந்துள்ளது.

கடந்த வாரம் சனிக்கிழமை நள்ளிரவு கடும் மழை பெய்துள்ளது. அப்போது திடீரென பாரிய சத்தமொன்று கேட்டுள்ளதுடன், ஒரு சில நொடிகளில் வீடொன்று மண்ணுக்குள் புதையுண்டுள்ளது.

இந்த வீடு மண்ணுக்குள் புதையுண்டு ஒரு சில நிமிடங்களில் மற்றுமொரு பாரிய சத்தம் கேட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். அதனைத் தொடர்ந்தே, மலைப் பகுதியில் பாரியதொரு மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த இடத்தில் சுமார் 14 வீடுகள் மண்ணுக்குள் புதையுண்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். சுமார் 40 பேர் வரை அந்த வீடுகளில் வாழ்ந்து வந்துள்ளதாகவும் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

எனினும், பொலிஸார் மற்றும் கிராம சேவகரின் மதிப்பீட்டில் அந்த விடயம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. வீடுகள் மாத்திரமன்றி, வீடுகளிலிருந்து வாகனங்கள் கூட மண்ணுக்குள் புதையுண்டுள்ளன.

ரம்புக்கேஹெல்ல பிரதேசத்தின் பாதி பகுதியே மண்ணுக்குள் புதையுண்டுள்ளது.

தமது சொந்தங்களை தேடும் நோக்கில் பிரதேசத்திலுள்ள இளைஞர்கள், மண்வெட்டி உள்ளிட்ட உபகரணங்கள் மூலம் மண்ணை அங்காங்கே தோண்டி தோண்டி தேடுகின்றனர்.

கடந்த ஞாயிறு அதிகாலை முதல் தேடுதல் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இதுவரை 9 பேரின் உடல்கள் மாத்திரமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாவது தமது உறவுகளை தாம் கண்டுபிடிப்போம் என்ற எதிர்பார்ப்புடன் இளைஞர்கள் தேடி வருகின்றனர்.

கண்டி தலதா மாளிகை உள்ளிட்ட பௌத்த விகாரைகளின் உதவியுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை அவதானிக்க முடிந்தது.

ராணுவத்தினர் உள்ளிட்டோர் மீட்பு பணிகளுக்கு உதவிகளை வழங்கிய போதிலும், தமக்கு பூரண ஒத்துழைப்பு இன்னும் சரியாக கிடைக்கவில்லை என்கின்றனர் அந்த பிரதேச மக்கள்.

மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் பாரியளவில் நீர் ஊடறுத்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. நீர் ஊடறுத்து செல்லும் இடங்களில் மண் சிறிது சிறிதாக சரிந்து வருவதை அவதானிக்க முடிந்தது.

மண்ணில் புதையுண்ட வீடொன்றில் வேலை செய்த லெட்சுமி என்பவர் கண்ணீர் மல்க, காணாமல் போனோர் தொடர்பில் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

'அவர்கள் எல்லாருமே நல்ல மனிதர்கள். வசதிமிக்கவர்கள். பெரிய பெரிய வீடுகள் இருந்தன. நல்ல குடும்பங்கள். ஒரு வீட்டில 5 பேர் முதல் 8 பேர் வரை இருந்தார்கள். வெளிநாடுகளுக்கு போயிட்டு வந்து வீடுகளைக் கட்டினார்கள். அந்த இடத்தில் இருந்தவர்கள் எல்லாம் சொந்தக்காரர்கள். எல்லாரும் இறந்து விட்டார்கள்,' என்றார் லெட்சுமி.

உடல்களை எடுக்க முயற்சிக்கின்ற போதிலும், எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பிரதேசத்தைச்

**இவை எல்லாம் இலங்கையில் நடந்துமுடிந்த இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட சோகக் கதைகளின் மாதிதான். அவை போன்ற கதைகள் பலநூறு உண்டு.**

சேர்ந்த தாஷிப் தெரிவிக்கின்றார்.

'இரவு 12 மணிக்கு தான் மண்சரிவு நடந்தது. எல்லாம் பெரிய பெரிய வீடுகள். எல்லாம் போய்விட்டது' என தாஷிப் தெரிவிக்கின்றார்.

'கொரோனா காலத்தில் கூட நாங்கள் தனிமைப்படுத்தப்படவில்லை. ஆனால், இன்று தனிமையாகியுள்ளோம். மனவேதனையில் கதைத்துக்கொண்டிருக்கின்றோம்." என கண்டியின் வாரியகல - ஹில்சைட் பகுதியைச் சேர்ந்த சிவா தெரிவிக்கின்றார்.

இலங்கையில் திட்வா புயலின் தாக்கம் அதிதீவிர நிலையில் இருந்த போது, நில்லம்பே பகுதியிலேயே அதிகளவான மழை பதிவாகியிருந்தது.

431 மில்லிமீட்டர் மழை பதிவான நில்லம்பே பகுதிக்கு சொந்தமான பிரதேசமே வாரியகல - ஹில்சைட்.

இங்கு சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்த 700க்கும் அதிகமானோர் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில், வாரியகல - ஹில்சைட் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தனிமையாகியுள்ளதை போன்றதொரு எண்ணத்தை கொண்டுள்ளனர்.

வாரியகல - ஹில்சைட் என்பது மலையொன்றுக்கு மேல் அமைந்துள்ள ஒரு கிராமம்.

இந்த கிராமத்திற்கு செல்வதற்கு சில வீதிகள் இருந்த போதிலும், கடந்த சில தினங்களாக பெய்த மழை காரணமாக இந்த கிராமத்திற்கு செல்லும் அனைத்து வீதிகளும் தடைப்பட்டுள்ளன.

பாரியளவிலான மண்சரிவுகள் பதிவாகியுள்ளதுடன், வீதிகள் உடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலையில், மக்களினால் நகர் பகுதிகளுக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், நகர் பகுதிகளிலுள்ளவர்களுக்கு ஹில்சைட் கிராமத்திற்குள் செல்ல முடியவில்லை.

இதனால், இந்த கிராமம் முழுமையாக தனிமைப்பட்டுள்ளதை போன்றதொரு எண்ணத்தில் இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பல கடினமான சூழ்நிலைக்கு மத்தியில் இவர்கள் காட்டு பகுதிக்குள் புதியதொரு ஒற்றையடி பாதையொன்றை வெட்டியுள்ளனர்.

இவ்வாறு மக்களினால் தற்காலிகமாக வெட்டப்பட்ட ஒற்றையடி பாதையின் ஊடாகவே, அந்த பிரதேசத்தை நோக்கி செல்லமுடிந்தது. அந்த பிரதேசத்தில் பாரிய மண்சரிவு சம்பவங்கள் பல பதிவாகியுள்ளதுடன், சில வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதை காண முடிந்தது.

இந்த பிரதேசத்தில் எந்தவொரு உயிரிழப்பும் பதிவாகவில்லை. சிலருக்கு சிறு காயங்கள் மாத்திரமே ஏற்பட்டுள்ளன.

எனினும், வெளிநகரங்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளமையினால், அத்தியாவசிய பொருட்களை இங்கு கொண்டு வர முடியவில்லை.

சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உணவை பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வாழ்க்கையில் தமக்கு இப்படியெல்லாம் நடக்கும் என்று நினைத்துக் கூட பார்த்ததில்லை என்கிறார் புஷ்பகலா.

'எனக்கு 40 வயது. எனது அனுபவத்தில் இப்படியொன்று நடக்கும் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை. என்னுடைய பிள்ளைகளை தூக்கிக்கொண்டு இரவு நேரத்தில் அங்கேயும் இங்கேயும் அலைந்தோம். என்ன சொல்வது என்றே தெரியவில்லை. பாதுகாப்பான இடம் என்று சொல்லி ஒரு இடமும் எங்களுக்கு கிடைக்கவில்லை' என்கிறார் அவர்.

பல தினங்களுக்கு பின்னர் பிரதேசத்திலுள்ள ஆண்கள் நகரத்திற்கு சென்று உணவு பொருட்களை வாங்கி வந்ததாகவும் அவர் கூறுகின்றார்.

'காலையில் என் கணவர் பலருடன் சேர்ந்து காலை 7 மணிக்கு சென்று பொருட்களை வாங்கிக்கொண்டு இரவுதான் வந்தார்கள். அவ்வளவு கஷ்டப்பட்டு அவர்கள் கொண்டு வந்தார்கள். பிள்ளைகளுக்கு என்ன நடக்கும் என்று தெரியாமல் இருக்கின்றது. மலை மேலே ஒரு பெரிய கல் இருக்கின்றது. அது எங்கு வந்து விழும் என்று தெரியாது' என அவர் கவலையுடன் குறிப்பிட்டார்.

இப்படியொரு சம்பவம் இனி ஒரு நாளும் வரக்கூடாது என இந்திராணி தெரிவிக்கின்றார்.

'மழைக்கு பிறகு இப்படியொரு சம்பவம் இனி நடக்கக்கூடாது என்று தான் நினைக்கின்றேன். இவ்வளவு சேதம் நடந்துள்ளது. எங்களை இன்று வரை யாரும் வந்து பார்க்கவில்லை. மழையில் பிள்ளைகளை தூக்கிக்கொண்டு ஓடினார்கள். இதுவரை ஒரு சாப்பாடு கூட கிடைக்க வில்லை. கடைகளில் பிஸ்கட் கூட இல்லை. இலங்கைக்கே இப்படியொன்று இனி நடக்கக்கூடாது.' என இந்திராணி கூறுகின்றார்.

தனக்கு 81 வயதாகின்ற நிலையில், தனது வாழ்க்கையில் இவ்வாறானதொரு கோர அனர்த்தத்தை கண்டதில்லை என கோவிந்தம்மா குறிப்பிடுகின்றார்.

'பலத்த சத்தம் கேட்டது. என் மகன் என்னை கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். வீட்டில் இருந்த 4 ஆடுகள் இறந்துவிட்டன. இன்றைக்கு சாப்பிட கூட கஷ்டமாக தான் உள்ளது.' என்கிறார் கோவிந்தம்மா 'எங்கள் கிராமத்திற்கு வருவதற்கு இரண்டு பாதைகள்தான் இருக்கின்றன. இந்த இரண்டு பாதைகளும் சரிந்து வீழ்ந்துள்ளன. இந்த கிராமத்தில் நாங்கள் தனிமைப்பட்டிருக்கின்றோம். எங்களுக்கு இப்போதைக்கு எந்தவொரு உதவியும் இல்லை. யாரும் இதுவரை எங்களை வந்து பார்க்கவில்லை. தமிழ், சிங்கள மக்கள் என 200 குடும்பங்கள் இந்த கிராமத்தில் இருக்கின்றோம். சாப்பிடுவதற்கு கூட ஒன்றும் இல்லை. கஷ்டமான சூழ்நிலையில் இருக்கின்றோம். எங்களுக்கு உதவி செய்து, எங்கள் மக்களை காப்பாற்ற வேண்டும்' என பிரதேசத்தைச் சேர்ந்த சிவா குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமுன் காத்தல்: அனர்த்த காலத்தின் பேச்சாளர்கள்!



நிலாந்தன்

அனர்த்த காலங்கள் அவற்றுக்கேயான புதிய பேச்சாளர்களை வெளிக் கொண்டு வரும். இறுதிக்கட்டப் போரின்போது வன்னி கிழக்கில் வாழ்ந்த மக்களின் சார்பாக குரல்தரவல்ல அதிகாரியாக மருத்துவர் சத்தியமூர்த்தி காணப்பட்டார். அப்படித்தான் அண்மை ஆண்டுகளில் இயற்கை அனர்த்தங்களின்போது மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கைகளை விடுக்கும் ஒரு "பப்ளிக் இன்ரலெக்சுவலாக" பேராசிரியர் பிரதீபராஜா மேலெழுந்துள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் 03.09.2025 புதன்கிழமை அவர் முகநூலில் எதிர்வரும் மாதங்களுக்கான வானிலை மாற்றங்கள் குறித்து நீண்ட முன்னறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் நொவம்பர் மாத நடுப்பகுதியிலும் இறுதிப்பகுதியிலும் ஏற்படக்கூடிய தாழமுக்கங்கள் தீவிர தாழமுக்கங்கள் ஆகவோ அல்லது புயல்களாகவோ மாறலாம் என்பதை கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்னரே முன்னறிவித்திருந்தார்.


அரச வளிமண்டலவியல் திணைக்களம் உத்தியோகபூர்வமாக வானிலை மாற்றங்களை அறிவிக்கும். வரக்கூடிய ஆபத்துக்களையும் முன்கூட்டியே அறிவித்து எச்சரிக்கும். ஊடகங்கள் அவற்றை உடனுக்குடன் அறிவித்து மக்களை எச்சரிக்கை செய்யும். இம்முறை டித்வா புயல் தாக்கப் போவது குறித்து அரச வளிமண்டலவியல் திணைக்களம் பொருத்தமான எச்சரிக்கைகளை முன்னறிவிக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. புயல் அனுராதபுரத்தை அடையும் வரையிலும் அதுதொடர்பான எச்சரிக்கைகள் விடுக்கப்படவில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால் தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தவரை குறிப்பாக யாழ்ப்பாணத்தில், பிரதீபராஜா இதுபோன்ற இயற்கை அனர்த்தங்களைக் குறித்து ஏற்கனவே சில நாட்களுக்கு அல்லது பல நாட்களுக்கு முன் எச்சரிப்பதுண்டு. அவருடைய எச்சரிக்கைகள் சில சமயங்களில் பிழைக்கலாம். மிகைப்படுத்தலாகவும் இருக்கலாம். அதனால் சில சமயங்களில் மீனவர்களுக்கோ விவசாயிகளுக்கோ அல்லது ஏனைய துறையினருக்கோ நட்டங்கள் ஏற்படலாம். ஆனால் அவர் எதிர்வு கூறியதுபோல இயற்கை அனர்த்தங்கள் நிகழ்ந்து அதனால் ஏற்படக்கூடிய உயிர்ச் சேதங்களோடு ஒப்பிடுகையில், வருமுன் காக்கும் நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய பொருட்சேதம் பொருட்படுத்தத்தக்கது அல்ல.

மழைக்காலங்களில் மலைகளில் மண்சரிவு ஏற்படுவது வழமை. ஒவ்வொரு பருவ மழைக்கும் மலையக மக்கள் மண்சரிவுகளில் சிக்கி உயிரிழந்து வருகிறார்கள். மழை வீழ்ச்சி அதிகரிக்கும்போது, மண் சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் வாழும் மக்களை எச்சரிக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு உண்டு. அந்த மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. இக்கட்டுரையில் முன் கூறியதுபோல வருமுன் காக்கும் நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய சிரமங்கள், நட்டங்களை விடவும் அந்த முன்னெச்சரிக்கையின்படி நிகழும் அனர்த்தத்தால் இழக்கும் உயிர்களின் நட்டம் பெரிது. நாடு இப்பொழுது அவ்வாறான உயிர்ச் சேதத்தைத்தான் எதிர்கொண்டிருக்கிறதா?.

ஒரு புயல் தாக்கப் போகிறது என்பதனை பிரதீபராஜா ஏற்கனவே தெளிவாகக் கூறியிருந்தார். அதை அவர் வழமை போல தனது முகநூல் பக்கத்தில் மட்டும் பகிரவில்லை. இந்தமுறை வடமாகாண ஆளுநர் அவரை தன்னுடைய அலுவலகத்துக்கு உத்தியோகபூர்வமாக அழைத்து உரையாடியுள்ளார். அந்தச் சந்திப்பில் சம்பந்தப்பட்ட துறைசார் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது பிரதீபராஜா தெரிவித்த தகவல்கள் பின்னர் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளிவந்தன. அதன்படி 130 ஆண்டுகளுக்குப் பின் ஒரு பேரிடர் நாட்டை நெருங்கி வருவதனை அவர் முன்கூட்டியே எச்சரித்திருந்தார்.

இந்த விடயத்தில் இப்போதுள்ள வடமாகாண ஆளுநர் வேதநாயகன் பாராட்டப்பட வேண்டியவர். ஏனென்றால் அவருக்கு முன் இருந்த ஒரு பெண் ஆளுநர் பிரதீபராஜாவை பொருட்படுத்தவில்லை. அந்தப் பெண் ஆளுநரின் காலத்தில் நடந்த ஒரு மெய்நிகர் சந்திப்பில் பிரதீபராஜா தனது கருத்தைக் கூற முற்பட்ட போது ஆளுநர் அவரைப் பொருட்படுத்தவில்லை. இதுதொடர்பாக அரச வளிமண்டலவியல் திணைக்களங்கள் தரும் தகவல்களைத்தான் நாங்கள் உத்தியோகபூர்வமாக எடுத்துக்கொள்ள முடியும். உங்களுடைய தகவல்கள் எங்களுக்குத் தேவையில்லை என்ற பொருள்பட அவர் பிரதிபராஜாவை அவமதித்திருக்கிறார்.



"பேரியற்கையின் போக்கை துல்லியமாக எதிர்வுகூறுவது கடினம்தான். ஆனால் அவ்வாறு சில துறைசார் நிபுணர்கள் எதிர்வுகூறிய போதிலும் அதை சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்கள் கவனத்தில் எடுத்திருந்தால் இந்த அளவுக்கு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்குமா? முன்னெச்சரிக்கை மிக்க வருமுன் காக்கும் நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய நட்டத்தை விடவும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இடர் பெரியது. இழப்பு பெரியது.துயரம் பெரியது."

ஆனால் இம்முறை டித்வா புயலுக்கு முன்னரே வடமாகாண ஆளுநர் பிரதீபராஜாவுக்கு உரிய கௌரவத்தை கொடுத்து அவரை அழைத்துப் பேசியிருக்கிறார். பிரதீபராஜா எச்சரித்ததை போலவே புயல் பேரிழப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதில் பிரதீபராஜாவைப் போலவே சென்னையை மையமாகக் கொண்ட செல்வக்குமார் என்ற வானிலை முன்னறிவிப்பாளரும் இலங்கையை நோக்கி முன்னெச்சரிக்கைகளை விடுத்திருக்கிறார்.

"வானிலை அறிவியல்" என்ற யூடியூப் தளத்தில்,செல்வகுமார் இலங்கைக்கான வானிலை அறிக்கை என்ற தலைப்பில் ஒரு காணொளியை 24ஆம் திகதி வெளியிட்டார். நவம்பர் 26 தொடக்கம் 28 வரையிலுமான மூன்று நாட்களில் முன்னப்பொழுதும் காணாத பெருமழை பெய்யும் என்றும் நிலச்சரிவு ஏற்படும் என்றும் எச்சரித்திருந்தார். இந்த இயற்கை அனர்த்தத்தில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கு மக்கள் கால்நடைகளையும் முக்கிய ஆவணங்களையும் எடுத்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர வேண்டும் என்றும் எச்சரித்திருந்தார். இந்த இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்வதற்குக் இலங்கை அரசாங்கம் அவசர கால நிலையை பிரகடனம் செய்ய வேண்டிவரும் என்பதையும் செல்வகுமார் முன்கூட்டியே மிகச்சரியாக ஊகித்திருந்தார்.

தன்னுடைய எச்சரிக்கையை இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறும் அந்த காணொளியில் அவர் கேட்டிருந்தார். அவர் பயன்படுத்திய வார்த்தைகளில் மிகைப்படுத்தல்கள் இருந்திருக்கலாம். ஆனால் இழக்க கொடுத்தவர்களின் நோக்குநிலையில் இருந்து பார்த்தால் அவை மிகைப்படுத்தலாகத் தெரியாது.

அதாவது நாட்டுக்குள் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புவியியல் துறை பேராசிரியரும் நாட்டுக்கு வெளியே அயலில் தமிழகத்திலிருந்து ஒரு துறைசார் வல்லுநரும் எச்சரித்த போதும்கூட அந்த எச்சரிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களின் காதில் விழவில்லை. அதற்குக் காரணம் என்ன?

பொதுவாக சமூக வலைத்தளங்களில் யூடியூப்களில் வரும் செய்திகள், தகவல்கள், எச்சரிக்கைகள் தொடர்பாக பொருட்படுத்தாத ஒரு பொதுப் புத்தி வளர்ந்து வருகிறது. யூடியூப் தலைப்புக்கள் அல்லது எச்சரிக்கைகள் மிகைப்படுத்தப்பட்டவை என்ற அபிப்பிராயம் பரவலாக உண்டு. வியூவர்ஸை கவர்ந்திழுப்பதற்காக கவர்ச்சியான தலைப்புகளைப் போடும் யூடியூப் பாரம்பரியமானது பாரதூரமான விடையங்களின் மீதான சீரியஸான கவனிப்பைக் குறைத்து விடுகிறது. பல யூடியூப்களில் தலைப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் தொடர்பு இருப்பதில்லை. இதனால் தலைப்பைக் கண்டு உள்நுழைந்து ஏமாற்றமடைந்த வியூவர்ஸ் குறிப்பாக அறிவுதெளிந்த, புத்திசாலித்தனமான வியூவர்ஸ் மீண்டும் ஒரு தடவை யூடியூப்களின் கவர்ச்சியான தலைப்புகளை, எச்சரிக்கைகளைக் கண்டு ஏமாற விரும்புவதில்லை. இந்த யூடியூப் பண்பாடு, வானிலை முன்னெச்சரிக்கை போன்ற விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

யூடியூப் பார்வையாளர்கள் மட்டுமல்ல ஏனைய சமூக வலைத்தள நுகர்வோரும் அவ்வாறுதான். எல்லாவற்றையும் ஸ்குரோல் பண்ணிக் கடக்கும் ஒரு சமூக வலைத்தளச் சூழல் வளர்ந்து விட்டது. உண்மையான எச்சரிக்கை எது உண்மையான ஆபத்து எது என்பதனை பகுத்தறிய முடியாத அளவுக்கு சமூக வலைத்தளச் சூழல் மேலோட்டமானதாக, அதிகம் ஜனரஞ்சகமானதாகக் காணப்படுகிறது.

பிரதீபராஜாவையும் செல்வகுமாரையும் தொடர்ந்து அவதானித்துவரும் சீரியசான சமூக வலைத்தளப் பாவனையாளர்கள் அவர்களுடைய எச்சரிக்கைகள் முன்னுணர்த்தும் ஆபத்துக்களை விளங்கிக் கொள்வார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் அனுராத ஜயரட்ன கூறுவதுபோல, இலங்கை அரசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் வருமுன் காக்கும் நடவடிக்கைகளை எடுத்திருந்தால், அழிவை ஒப்பீட்டளவில் குறைத்திருக்கலாமா ?

நாடாளுமன்ற உறுப்பினர் அநுராத ஜயரட்ன, நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, கம்பளை பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பேரழிவுக்கும், உயிரிழப்புகளுக்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று குற்றம் சாட்டினார். அது இயற்கை அனர்த்தம் என்ற போதிலும் உயிரிழப்புகள் இந்தளவுக்கு அதிகரிக்கக் காரணம், உரியநேரத்தில் முன்னெச்சரிக்கை விடுக்கப்படாமையே என்றும் கூறினார்.

வழக்கமாக 160 மில்லிமீற்றர் மழை பெய்தாலே மகாவலி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உண்டு. ஆனால், இம்முறை 400 மில்லிமீற்றர் மழை பெய்யும் என முன்கூட்டியே தெரிந்திருந்தும், மக்களுக்கு அதுகுறித்து எவ்வித எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை என்றும், குறிப்பாக, நவம்பர் 27ஆம் திகதி ஏற்படவுள்ள ஆபத்தை உணர்ந்து, 26ஆம் திகதி நடைபெறவிருந்த உத்தியோகபூர்வ கூட்டங்கள் ரத்து செய்யப்பட்டபோதிலும், சாதாரண மக்களுக்கு அந்த ஆபத்துக் குறித்து அறிவிக்கப்படாததற்கு, சம்பந்தப்பட்ட திணைக்களங்களே பொறுப்பு என்று அவர் குற்றம் சாட்டினார். நாவலப்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்கள உபஅலுவலகம் நீர்மட்டத்தை அளவிட்டிருந்தும், அந்தத் தகவலை கம்பளை மக்களுக்குப் பரிமாறத் தவறியதே பல உயிர்கள் பறிபோகக் காரணமாக அமைந்தது என்றும் அவர் கூறினார். மேலும், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி கொத்மலை அணை திறக்கப்பட்டமை நிலைமையை மேலும் மோசமாக்கியது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

புயலுக்கு பின்னரான உரையாடல்கள் அவ்வாறு அரசு திணைக்களங்களின் மீதான விமர்சனங்களாகவே காணப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை விமர்சிக்க வேண்டும் என்பதற்காக ஒரு பகுதியினர் அரசு திணைக்களங்களில் பிழை பிடிக்கிறார்கள் என்று அரசாங்கத்துக்கு ஆதரவானவர்கள் கூறுகிறார்கள். எவ்வளவுதான் தொழில்நுட்பம் வளர்ந்தாலும் இயற்கை அனர்த்தங்களை துல்லியமாக எதிர்வுகூற முடியாது என்று அரசாங்கத்துக்கு ஆதரவான தமிழ் விரிவுரையாளர்கள் நியாயம் கூறுகிறார்கள்.

உண்மை. பேரியற்கையோடு ஒப்பிடுகையில் மனிதர்கள் அற்பமானவர்கள். சீனர்களுடைய பாரம்பரிய ஓவியங்களில் வரும் நிலக்காட்சிகளை இங்கு சுட்டிக்காட்டலாம். அந்த நிலக் காட்சிகளில் இயற்கை மிகப் பிரமாண்டமாக வரையப்படும். மனிதர்களோ மிகச் சிறிய, அற்ப புள்ளிகளாக காட்டப்படுவார்கள்.

எனவே பேரியற்கையின் போக்கை துல்லியமாக எதிர்வுகூறுவது கடினம்தான். ஆனால் அவ்வாறு சில துறைசார் நிபுணர்கள் எதிர்வுகூறிய போதிலும் அதை சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்கள் கவனத்தில் எடுத்திருந்தால் இந்த அளவுக்கு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்குமா? முன்னெச்சரிக்கை மிக்க வருமுன் காக்கும் நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய நட்டத்தை விடவும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இடர் பெரியது.இழப்பு பெரியது. துயரம் பெரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகம் தேர்தலுக்குத் தயாராகின்றதா?



நியூசிலாந்து சிற்சபேசன்

2026 தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான ஆண்டாகும். அதனால் தேர்தல் முஸ்தீபுகள் ஆரம்பமாகிவிட்டன. தண்ணீருக்கு வெளியே விழுந்த மீன்போன்று அரசியல்கட்சிகள் துடிக்க ஆரம்பிக்கின்றன. மறுவளத்தில், தேர்தல் ஆணையமும் வரிந்துகட்டிக்கொண்டு களத்தில் இறங்கியுள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்களில் வாக்காளர்பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்த" பணிகளைத் தேர்தல் ஆணையம் ஆரம்பித்திருக்கின்றது. ஏற்கெனவே, பீகாரிலே நடைபெற்ற வாக்காளர்பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்தம்" தொடர்பான பரவலான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அவை தொடர்பில் பல்வேறு ஆதாரங்களை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முன்வைத்தன. சுமார் 65 லட்சம் வரையானோர் திட்டமிட்டோ அல்லது தவறுதலாகவோ வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

வாக்காளர்பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்தம்" என்பது வழமையான நடைமுறையாகும். ஆனால், கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்படவில்லை. அதற்கு, பல்வேறு நிர்வாகக் காரணங்கள் சொல்லப்படுகின்றன. இருந்தாலும், ஆட்சியிலிருந்த கட்சிகள் சட்ட ஓட்டைகளிலே புகுந்து விளையாடியிருக்கலாம். வாக்காளர்பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்தம்" நடைபெறுவதைத் தவிர்த்திருக்கலாம் என்னும் சந்தேகமும் உண்டு.

எதுஎப்படியாகிலும், மோடி தலைமையிலான தற்போதைய அரசு, வாக்காளர்பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்த" செயற்பாட்டை ஆரம்பித்திருக்கின்றது. அதிலேகூட, அதனை நடைமுறைப்படுத்துவதிலே காண்பிக்கப்படுகின்ற "சுடுகுது மடியைப் பிடி" என்னும் வேகமே அதிகமான கவனிப்பைப் பெறுகின்றது.

இத்தகையதொரு பின்னணியிலேயே, தமிழ்நாட்டிலே ஆரம்பமாகியுள்ள வாக்காளர்பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்த" பணிகள், அரசியல் கட்சிகளிடையே, பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

தமிழக வாக்காளர் பட்டியலிலே, பிற மாநிலத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன. அதன் மூலமாக, தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முற்படுவதான தோற்றப்பாடு தெரிகிறது.

அந்தவகையிலேயே, தேர்தல் ஆணையம் வெளியிட்ட அண்மைய அறிவிப்புக்கூட கவனத்தைப் பெறுகின்றது. அதிலே, 2025 ஜூலை 1ம் திகதி வெளியிடப்பட்ட பீகார் "சிறப்புத் தீவிரத் திருத்த" வாக்காளர் பட்டியலில் உள்ளவர்களும், தமிழ்நாட்டின் "சிறப்புத் தீவிரத் திருத்த" வாக்காளர் பட்டியலில் தங்களை இணைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகச் செய்திகள் சொல்கின்றன.

ஆக, பீகாரிகளை தமிழ்நாட்டின் வாக்களர்பட்டியலில் இணைத்துக் கொள்ளும் படிமுறையாகவே, வாக்காளர்பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்தத்தை", தமிழக அரசியல் கட்சிகள் கருதுகின்றன.

அஃது, தேர்தல் முடிவுகளை, பரவலாக என்று இல்லாவிட்டலும், குறிப்பிட்ட பிரதேசங்களிலே மாற்றியமைக்கலாம். காரணம். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டிலே தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்றது. அதிலே, பீகாரிகளின் எண்ணிக்கை இருபது லட்சம் வரையெனக் கணிக்கப்படுகின்றது. ஒருவருக்கு "ஒருவாக்கு" என்பது அடிப்படையல்லவா?, இரண்டு வாக்குரிமையைப் பெற்றுக்கொள்வதைச் சட்டம் அனுமதிக்காதல்லவா? போன்றவை நியாயமான கேள்விகளாகும்.

ஒரு தொகுதியின் சாதாரண வாக்காளர் யார் என்பது தொடர்பில், மன்மோகன்சிங் வழக்கில், நீதிமன்றம் தெளிவான வழிகாட்டுதலை வழங்கியிருக்கின்றது. ஆனால், குறுகியகாலத்திலே வாக்காளர் பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்தத்தை" ஒப்பேற்றி, தேர்தலையும் முடித்துவிடுகின்ற அவசரம் தெரிகின்றது. ஆற்றைத் தாண்டிய பின்னர் "அண்ணன் என்னடா?, தம்பி என்னடா?" என்ற மாதிரியாக விஷயத்தைக் கடக்கவிரும்புகின்ற எத்தனம் தெரிகிறது. அதற்கு, பீகார் தேர்தல் நல்லதொரு சாட்சியாகும். அதனாலேயே, வாக்காளர்பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்தம்" தொடர்பில் தமிழக அரசியல் கட்சிகள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் கவனத்தைப் பெறுகின்றன. எதுஎப்படியாகிலும், தேர்தலுக்கான முன்னாயத்தங்களை தமிழக அரசியல் கட்சிகள் வேகமாகவே முன்னெடுத்துவருகின்றன.

திராவிடக் கட்சிகளை மையப்படுத்தியே தமிழக அரசியல் சுழல்கின்றது. இரண்டு பெரிய திராவிடக் கட்சிகளுமே ஓரளவு சமமான வாக்குவங்கியைக் கொண்டிருக்கின்றன. 2021 சட்டமன்றத் தேர்தலிலே, திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தலா 37 மற்றும் 33 சதவிகித வாக்குககளைப் பெற்றன. ஆட்சியமைப்பதற்குத் தேவையான ஆசனங்களைப் பெறுவதற்காகவே கூட்டணிகளை அமைக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி, தற்போதுவரையில், உறுதியாகவே காணப்படுகின்றது. கடந்த இரண்டு தேர்தல்களிலே வெற்றி பெற்றிருக்கின்றது. அதிலே, காங்கிரஸ், இடதுசாரிகள், திருமாவளவன், வைகோ உள்ளிட்ட பல்வேறு தரப்புக்கள் உள்ளன.


மறுவளத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி தெளிவற்றதாகவே காணப்படுகின்றது. அதிலே, தேசிய அளவிலே பேசப்படுகின்ற, பாரதீய ஜனதாவே பெயர் சொல்லக்கூடிய கட்சியாகும். அதுவும்கூட, மாநில அளவில் சிறுகட்சியாகவே உள்ளது. அதற்கப்பால், பாரிவேந்தர், ஏசி சண்முகம், ஜிகே வாசன் போன்றோரின் சிறு கட்சிகளும் உள்ளன. மேலதிகமாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேறிய டிடிவி தினகரன், ஓ பன்னீர்செல்வம் போன்றோரும் உள்ளனர்.

ஆக, ஓர் டவுன்பஸ் கணக்கில் "யார் ஏறுகின்றனர்?, யார் இறங்குகின்றனர்?" என்று தெரியாத அளவிலேயே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி காணப்படுகின்றது.

பாட்டாளி மக்கள் கட்சி அப்பா-மகன் சண்டையில் பொழுதைக் கழிக்கின்றது. ஆனால், தேர்தல் வரும்போது ஏதோவொரு கூட்டணியில் சேர்ந்து கொள்வார்கள்.

சீமான், விஜயகாந்த் தரப்புக்களுடன், விஜய் கட்சியும் தமிழக தேர்தல் களத்தில் காணப்படுகின்றது. விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் விக்கிரவாண்டி, மதுரை கட்சி மகாநாடுகள் பரவலான கவனத்தை ஈர்த்ததன. கரூர் சம்பவம் பல கேள்விகளை எழுப்புகின்றது. இவ்வாறாகவே, தமிழகம் தேர்தலுக்கு தயாராகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

# இடதுசாரி இயக்கத்துக்கு தனது வாழ்வை அர்ப்பணித்த "திரு"



வல்லிபுரம் திருநாவுக்கரசுவின் (தோழர் திரு) மரணம் இளவயதில் இருந்தே இடதுசாரி அரசியல் இயக்கத்துக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த - கொள்கைப்பற்றும் நேர்மையும் கொண்ட ஒரு அரசியல் செயற்பாட்டாளரை எம்மத்தியில் இருந்து அபகரித்துச் சென்றுவிட்டது.

சில வருட கால சுகவீனத்துக்கு பிறகு தனது 88 வது வயதில் (2025 அக்டோபர் 31) திரு இயற்கை எய்தினார். அவரை நீண்டநாட்களாக சந்திக்க முடியாமல் போனது எனக்கு மிகுந்த கவலையை தருகிறது. நான் வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் இருந்து திருவை அறிவேன். பின்னர் தினக்குரல் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகவும் அடுத்து பிரதம ஆசிரியராகவும் நான் பணியாற்றிய சுமார் 15 வருட காலத்தில் எனக்கும் அவருக்கும் இடையிலான நெருக்கம் மேலும் அதிகரித்தது. நானும் இடதுசாரி இயக்க ஆதரவாளர் என்பதும் அதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

தினக்குரல் ஆரம்பித்த 1990களின் பிற்பகுதியில் இருந்து சுகவீனமடையும் வரை திரு தவறாமல் வாரந்தோறும் அல்லது இரு வாரங்களுக்கு ஒரு தடவை அரசியல் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வந்தார். கொழும்புக்கு வெளியே கல்கிசையில் வசித்துவந்த திரு அடிக்கடி கொழும்பு முகத்துவாரம் பகுதியில் அமைந்திருந்த தினக்குரல் அலுவலகத்துக்கு சிரமம் பாராது வருகை தந்து எம்மைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பல்வேறு விடயங்கள் குறித்தும் அவரிடமிருந்து ஆழமான கருத்துக்களை எம்மால் அந்த சந்திப்புக்களின்போது அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

திருவின் கட்டுரைகள் சமூகத்தின் பல்வேறு பிரிவினராலும் ஆர்வத்துடன் வாசிக்கப்பட்டன என்பதை ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் நான் நன்கு அறிவேன். பல்வேறு அரசியல் பிரச்சினைகள் குறித்து திரு எழுதினாலும் போர்க்காலத்தில் தமிழ்மக்கள் அனுபவிக்க வேண்டியிருந்த இன்னல்களை வெளியுலகிற்கு கொண்டுவரும் நோக்கில் தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை.

அவருடனான சந்திப்புக்களின் போது அந்த கட்டுரைகளை தொகுத்து நூல் வடிவில் கொண்டுவர வேண்டும் என்று அவரிடம் நான் கூறினேன். அவருக்கும் அவ்வாறு செய்ய வேண்டும் என்ற அக்கறை இருந்தது. ஆனால், திரு சுகவீனமடைந்த பிறகு அதைப் பற்றி பேசுவதற்கோ அல்லது செயலில் இறங்குவதற்கு ஊக்கம் கொடுப்பதற்கோ வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அவரது குடும்பத்தவர்கள் குறிப்பாக வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகள் அவரது கட்டுரைகளை தெரிவுசெய்து தொகுத்து நூலாக வெளியிடுவதற்கு முயற்சிக்க வேண்டும். அது அவருக்கு செய்யும் பொருத்தமான அஞ்சலியாக இருக்கும் என்பது எனது அன்பான வேண்டுகோள்.

இடதுசாரி இயக்க அரசியல் வாழ்வில் திரு நீண்டகாலம் இடர்பாடுகளைச் சந்தித்தார். ஆனால் அந்த இடர்பாடுகளின் விளைவான நெருக்குதல் அவரது அரசியல் இலட்சியத்தில் தளர்வை ஏற்படுத்துவதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை.

அரசாங்க சேவையில் ஒரு நிருவாக அதிகாரியாக பணியாற்றிய திரு இளமைக்காலத்தில் இருந்து லங்கா சமசமாஜ கட்சியின் செயற்பாடுகளில் பங்கேற்றார். அரசாங்க எழுதுவினைஞர் சேவைச் சங்கத்தின் முக்கியமான செயற்பாட்டாளர்களில் ஒருவராக இருந்த திரு 1980 ஜூலை பொது வேலைநிறுத்தத்தை அடுத்து வேலை இழக்க வேண்டியேற்பட்டது. பின்னர் மீண்டும் வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டபோது அரசியல் செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபடும் ஆர்வம் காரணமாக அவர் இணைந்து கொள்ளவில்லை.

சமசமாஜ கட்சி தலைவர்களின் போக்குகளில் வெறுப்படைந்த வாசுதேவ நாணயக்கார, கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன போன்ற அன்றைய இளந்தலைவர்கள் நவசமசமாஜ கட்சியை ஆரப்பித்தபோது அவர்களுடன் இணைந்துகொண்ட திரு தனது இறுதி மூச்சு வரை அதே பாதையில் பயணித்தார். விக்கிரமபாகுவுடன் எனக்கு அறிமுகத்தை ஏற்படுத்தித் தந்தவரும் திருதான்.

திருவின் மறைவுடன் வடபகுதியைச் சேர்ந்த இடதுசாரி இயக்கத்தின் பழைய தலைமுறை ஒன்றின் காலப்பகுதி முடிவுக்கு வருகிறது என்லாம். திரு பயனுறுதியுடைய அரசியல் வாழ்க்கையின் மூலம் முன்னுதாரணமான ஒரு மரபை எமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். அவர் சார்ந்த அரசியல் இயக்கத்துக்கும் குடும்பத்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

வீரகத்தி தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# வங்கதேச முன்னாள் பிரதமருக்கு மரண தண்டனை!

## வரலாற்றில் மரண தண்டனை பெற்ற உலக தலைவர்கள்:

முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரஃப் (1)



முகமது நஜிபுல்லா - ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி



சுன் டு-ஹ்வான் - தென் கொரியாவின் ஜனாதிபதி (1980-1988)



அமீர்-அப்பாஸ் ஹொவைடா - ஈரானின் பிரதமர் (1965-1977)



சதாம் உசேன் - ஈராக்கின் ஜனாதிபதி



ஜார்ஜியோஸ் பாப்படோபௌலோஸ்



மற்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி (1971-1977)



மனித குலத்திற்கு எதிராக செயற்பட்டதாக, வங்தேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவிற்கு மரண தண்டனை விதித்து சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

வங்கதேசத்தில் கடந்த ஆண்டு ஜூலையில், இடஒதுக் கீடுக்கு எதிராக நடந்த மாணவர் போராட்டத்தில், 1,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட வழக்கில், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதித்து, அந்நாட்டின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் தீர்ப்பளித்துள்ளது. கடந்தாண்டு ஜூனில், சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டம் அமலுக்கு வந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் போராட் டத்தை தொடர்ந்தனர். சுதந்திர போராட்ட தியாகிகளின் இடஒதுக்கீட்டை எதிர்ப்பவர்கள் தேச துரோகிகள் என, அப்போது பிரதமராக இருந்த அவாமி லீக் கட்சியின் ஷேக் ஹசீனா தெரிவித்தார்.

இதனால், ஆத்திரமடைந்த மாணவர்கள் 2024 ஜூலை யில் நாடு முழுதும் போராட்டத்தை விரிவுபடுத்தினர். இந்த போராட்டங்களை தடுக்க பொலீசார், பாதுகாப்பு படையினர் மற்றும் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியினர் முயன்றதால், போராட்டம் வன்முறையாக மாறியது.



தலைநகர் டாக்காவிலும், பிற நகரங்களிலும் போராட் டக்காரர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் இடையே மோதல் ஏற்பட்டது. டாக்காவில் பொலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலர் கொல்லப்பட்டனர். போராட் டக்காரர்களை கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட் டது. இதனால், கலவரம் மேலும் தீவிரமடைந்தது.

நீண்ட காலமாக இட ஒதுக்கீட்டுக்கு எதிராக மாண வர்கள் போராட்டம் நடாத்தி வந்தனர். ஆனால் இம்மு றையே பெரிய வன்முறையாக வெடித்தது. இதில் ஆயிரத் துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த வன்முறையே பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவின் தலைமையிலான அரசுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

மாணவர் போராட்ட நிலைமையை கட்டுப்படுத்த முடியாத நிலையில், கடந்த ஆண்டு ஆகஸ்ட் ஐந்தில் ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை ராஜினாமா செய்து, இந்திய நாட்டுக்கு தப்பி வந்தார். ஜூலை முதல் ஆகஸ்ட் வரை நடந்த கலவரத்தில், 1,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக வங்கதேச சுகாதார துறையும், 1,400க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக ஐ.நா., மனித உரிமைகள் கமிஷனும் கூறின.

ஷேக் ஹசீனா பதவியை விட்டு விலகியதை தொடர்ந்து நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது. புதிய அரசு அமைந்த பிறகு ஹசீனாவுக்கு எதிராக இனப் படுகொலை, ஊழல் உள்பட பல வழக்குகளை பதிவு செய்துள்ளது. இட ஒதுக்கீட்டு கொள்கைக்கு எதிராக போராடுவோரை சுட்டு கொல்ல ஹசீனா உத்தரவிட்ட தாக கூறப்படுகிறது.

இது தொடர்பான ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பில் ஷேக் ஹசீனா, முன் னாள் உள்துறை அமைச்சர், முன்னாள் பொலிஸ் ஐஜி ஆகியோர் மீது மனித குலத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கு தலைநகர் டாக்காவில் உள்ள சர்வதேச குற்ற தீர்ப்பாயம் விசாரித்து வந்தது. இந்த நிலையில் மனித குலத்துக்கு எதிராகக் குற்றம் புரிந்த வழக்கில் வங் கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா குற்றவாளி என சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியது. மேலும் மொத்தம் 5 குற்றச்சாட்டுகள் ஷேக் ஹசீனா மீது வைக் கப்பட்ட நிலையில் 3 குற்றச்சாட்டுகளில் மரண தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

### மிக மோசமான கலவரம்:

வங்கதேச வரலாற்றில் நடந்த மிக மோசமான கல வரங்களில் ஒன்றாக இது அமைந்தது. ஷேக் ஹசீனா நாட்டை விட்டு தப்பி ஓடிய பின், நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது. இந்த கலவரம் குறித்து விசாரிக்க, வங்கதேச சர்வதேச குற்றவியல் தீர்பாயம் என்ற சிறப்பு நீதிமன்றத்தை, முகமது யூனுஸ் அரசு அமைத்தது. அதில், ஷேக் ஹசீனா மனித குலத்திற்கு எதி ராக குற்றம் புரிந்தவர் என, அரசு சார்பில் வாதிடப்பட் டது.

இந்த வழக்கின் தீர்ப்பு அண்மையில் வழங்கப்பட்டது. 2024 ஜூலை போராட்டத்தில் 1,400க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதற்கு ஷேக் ஹசீனாவே பொறுப்பு. அவரே இந்த படுகொலைகளுக்கு மூளையாகச் செயல்பட்டவர். இது, சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக் கப்பட்டதால், அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படு கிறது என தெரிவித்தனர்.

### இந்தியா ஷேக் ஹசீனாவை ஒப்படைக்குமா?

ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட் டதை அடுத்து, அவரை ஒப்படைக்கும்படி, இந்திய அர சிடம் வங்கதேச அரசு கோரியுள்ளது. இந்நிலையில் தீர்ப்பு குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளி யிட்ட அறிக்கையில், நெருங்கிய நாடான வங்கதேசத் தில், மக்களின் அமைதி, ஜனநாயகம், நிலைத்தன்மை




போன்ற நலன்களுக்கு இந்தியா எப்போதும் உறுதுணை யாக இருக்கும். அதற்காக அந்நாட்டுடன் இணைந்து செயல் படுவோம் என கூறப்பட்டுள்ளது.

ஆனால், தீர்ப்பு குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்கப் படவில்லை. ஹசீனாவை ஒப்படைப்பது தொடர்பாக வும் இந்திய மத்திய அரசு தரப்பில் இதுவரை எதுவும் கூறப்படவில்லை.

### மரண தண்டனை பெற்ற உலக தலைவர்கள்:

மரண தண்டனை விதிக்கப்பட்ட உலக நாடுகளின் தலைவர்களில் ஷேக் ஹசீனா குற்றவாளி என நிரூபிக்கப் பட்டுள்ளமை முதல் வழக்கு அல்ல. வரலாற்று ரீதியாக, பாகிஸ்தான் பர்வேஸ் முஷாரஃப் உட்பட பல உயர்மட்ட தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரஃப் 2001 முதல் 2008 வரை அதிபராக இருந்தார். 2007 ஆம்



ஆண்டு அரசியலமைப்பை இடைநிறுத்திய குற்றச்சாட்டு கள் தொடர்பான தேசத்துரோக வழக்கில் 2019 ஆம் ஆண்டு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்த தண்டனை 2020 இல் ரத்து செய்யப்பட்டது. இருப்பினும், பர்வேஸ் முஷாரஃப் 2023 இல் துபாயில் நாடுகடத்தப்பட்ட நிலையில் இறந்தார்.

கிரேக்க நாட்டின் அதிபராக இருந்தவர் ஜார்ஜியோஸ் பாப்படோபௌலோஸ். 1967 ஆட்சிக் கவிழ்ப்புக்கு தலைமை தாங்கிய இந்த இராணுவ சர்வாதிகாரி 1973 இல் தூக்கியெறியப்பட்டார். தேசத்துரோகம் மற்றும் கிளர்ச்சி குற்றச்சாட்டுகளின் பேரில் 1975 இல் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அந்த தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது, மேலும் அவர் 1999 இல் சிறையில் இறந்தார்.

தென் கொரியாவின் ஜனாதிபதியாக இருந்த சுன் டூ-ஹ்வான் (1980-1988) 1979 இராணுவ சதிப்புரட்சி மூலம் தனது ஆட்சியை கைப்பற்றினார். 1980 குவாங்ஜூ படுகொலையில் அவரது பங்கிற்காக சுன் டூ-ஹ்வானுக்கு 1996 இல் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அவரது தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பட்டு 1997 இல் அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. அவர் 2021 இல் இறந்தார்.

### ஈராக் சதாமுக்கு தூக்கு:

ஈராக்கின் ஜனாதிபதி சதாம் உசேன் 1982 ஆம் ஆண்டு துஜெயிலில் 148 ஷியா முஸ்லிம்கள் படுகொலை செய் யப்பட்டதில் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக தண்டனை விதிக்கப்பட்டது. சதாம் உசேன் 2006 ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். அமெரிக்க அரசின் உதவியுடன் டிசம்பர் 30, 2006 அன்று அவருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி முகமது நஜிபுல்லாக்கு 1996 ஆம் ஆண்டு தலிபான்களால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. தலிபான்கள் காபூலைக் கைப்பற்றிய பிறகு, அவர் ஐ.நா. வளாகத்தில் இருந்து பிடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, செப்டம்பர் 1996 இல் பகிரங்கமாக தூக்கிலிடப்பட்டார்.

பாகிஸ்தான் ஜனாதிபதியாக சுல்பிகர் அலி பூட்டோ 1971 தொடக்கம் 1977 வரை இருந்தார். 1977 ஆம் ஆண்டு ஒரு இராணுவ சதியில் சுல்பிகர் அலி பூட்டோ பதவி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் அவர் ஒரு அரசியல் போட்டியாளரைக் கொலை செய்ய சதி செய்ததாக குற் றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். சர்வதேச முறையீடுகள் இருந்தபோதிலும், அவர் ஏப்ரல் 1979 இல் தூக்கிலிடப்பட்டார்.

ஈரானின் பிரதமர் அமீர்-அப்பாஸ் ஹொவைடா 1965-1977 வரை பதவியில் இருந்தவர். 1979 இஸ்லாமி யப் புரட்சியைத் தொடர்ந்து, கடவுளுக்கு எதிராகப் போர் தொடுத்தல் மற்றும் ஊழல் உள்ளிட்ட குற்றச் சாட்டுகளின் பேரில் அவர் கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். ஏப்ரல் 1979 இல் அவர் துப்பாக்கிச் சூடு மூலம் கொல்லப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “முன்னாள் ஜனாதிபதிகளுடன் அநுர ஆலோசிக்க வேண்டும்”

கொழும்பு, டிசெ. 07

எமது ஓய்வுபெற்ற தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்‌ஷ், சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன போன்ற அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு, ஏற்பட்டுள்ள இந்த தேசிய அனர்த்தம் தொடர்பில் கலந்துரையாட வேண்டும். கட்சித் தலைவர் என்றவகையில் இந்த கோரிக்கையை ஜனாதிபதிக்கு முன்வைக்கிறேன். அவர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்பது தொடர்பில் எங்களுக்கு பிரச்னையில்லை. அது அவ்வாறு இடம்பெறட்டும். அதற்கு மத்தியில் இந்த அனர்த்தத்தில் இருந்து மீள நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்க்கட்சி உள்ளிட்ட அனைத்து தலைவர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் எமக்கு தேவையான இந்த பாரிய நிதியை தேடிக்கொள்ள முடியாது- என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விரைவாக வீடுகள் அமைத்துக்கொடுக்க வேண்டியுள்ளது. அதற்கு அரச காணிகளை இனம் கண்டு, அந்த காணிகளுக்கு கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சான்றிதழ் தேவைப்படுகிறது. ஆனால், இந்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தில் போதுமான அதிகாரிகள் இல்லை. இதுதொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். எமது பல்கலைக்கழகங்களில் இருக்கும் பொறியியல் பீட பொயியலாளர்களையும் இந்த பணியில் இணைத்துக்கொண்டு, இதனை மேற்கொள்ள வேண்டும்.அவ்வாறு இல்லாமல் இதனை செய்ய முடியாது.

கண்டி தெல்தோட்டையில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அங்கும் பெருமளவிலான வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. என்றாலும் தற்போது சில மக்கள் போவதற்கு இடமில்லாமல் அங்கு இருக்கிறார்கள். அதனால் இந்த மக்களுக்கு மாற்றுத் தீர்வை பெற்றுக்கொடுக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# மக்கள் கொண்டிருக்கும் சுதந்திரத்தை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும்

## சர்வதேச ஊடகவியலாளர்கள் பேரவை

கொழும்பு, டிசெ. 07

ஜனாதிபதியை விமர்சிப்போருக்கு எதிராக அவசர காலச்சட்ட விதிகள் பிரயோகிக்கப்படும் என்ற பிரதியமைச்சர் சுனில் வட்டகலவின் கருத்து தொடர்பில் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியிருக்கும் சர்வதேச ஊடகவியலாளர்கள் பேரவை, தற்போதைய நெருக்கடி நிலைக்கு மத்தியில் உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கும், கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் பொதுமக்கள் கொண்டிருக்கும் சுதந்திரத்தை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இலங்கை மிகமோசமான இயற்கைப் பேரனர்த்தத்துக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், ஜனாதிபதியை விமர்சிக்கும் நபர்களுக்கு எதிராக அவசர காலச்சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பிரயோகிக்குமாறு பிரதியமைச்சர் சுனில் வட்டகல பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து கண்டனத்தை வெளிப்படுத்தியும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்துடன் இணைந்து சர்வதேச ஊடகவியலாளர்கள் பேரவையால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பொதுமக்கள் பாதுகாப்பு பிரதியமைச்சர் சுனில் வட்டகலவுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்போது, குறிப்பாக வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் சிலரால் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவையும், சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரையும் இலக்குவைத்து சமூக வலைத்தளங்களில் மிகமோசமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி இவ்வாறான நடவடிக்கைகள் தொடரும் பட்சத்தில் அரசாங்கத்தால் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும், அந்தச் சட்டத்தின் 5 ஆம் சரத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள அவசரகால அதிகாரங்கள் நெருக்கடி நிலையின் போது பகிரப்படும் தகவல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இடமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதியமைச்சர் சுனில் வட்டகல இவ்வாறு கூறினாலும், அவசர காலச்சட்டமானது விமர்சனங்களையோ அல்லது கருத்துக்களையோ ஒடுக்குவதற்குப் பயன்படுத்தப்படமாட்டாது என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உறுதியளித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அமைச்சர் சுனில் வட்டகலவின் கருத்தானது அனர்த்த முகாமைத்துவம் எனும் போர்வையில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகும்.

நாட்டில் நெருக்கடி நிலவும் வேளையில் உரிய நேரத்தில் சரியானதும், நம்பகத்தன்மை வாய்ந்ததுமான செய்திகளை வழங்கவேண்டிய மிகப்பாரிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு.

அதேபோன்று உண்மைகளைத் தெரிந்துகொள்வதற்கும், கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் பொதுமக்கள் கொண்டிருக்கும் சுதந்திரத்துக்கு அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும் என அவ்வறிக்கையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# நாட்டில் 504 அனர்த்த நிவாரண குழுக்கள் நிவாரண பணியில்

கொழும்பு, டிசெ. 07

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளுக்கு நாடளாவிய ரீதியில் 504 அனர்த்த நிவாரண மருத்துவ குழுக்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ள “சுரக்” அனர்த்த முகாமைத்துவ மற்றும் பதிலளிப்பு பிரிவின் ஒருங்கிணைப்பின் கீழ் சுமார் 504 அனர்த்த நிவாரண குழுக்கள் தற்போது நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

இந்த மருத்துவ குழுக்கள் நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 1041 பாதுகாப்பு முகாம்களை மையமாகக் கொண்டு தமது சேவைகளை வழங்கி வருவதாக சுகாதார அமைச்சின் மருத்துவ சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகமும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தேசிய இணைப்பாளருமான சமிதி சமரகோன் குறிப்பிட்டார்.

மேலும், ஒத்துழைப்பு வழங்கும் அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து செயல்படும் மருத்துவ குழுக்கள், பாதுகாப்பு முகாம்களில் தங்கியுள்ள மக்களில் 98. 3 சதவீதமானோரை பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். உடனடியாக சிகிச்சைகள் தேவைப்படும் நபர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்படுவதுடன், மேலதிக சிகிச்சை தேவைப்படும் நபர்கள் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# நீரை முறையாக வெளியேற்றிருந்தால் உயிரிழப்புகளை தடுத்திருக்கலாம்

## சாமர சம்பத் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

நீர்த்தேக்கத்தில் இருந்து நீரை முறையாக விடுவிக்க நீர்ப்பாசன அமைச்சர் நடவடிக்கை எடுத்திருந்தால் மக்கள் நீரில் மூழ்கி உயிரிழப்பதை தடுத்திருக்கலாம். தனது பொறுப்பை நிறைவேற்ற தவறிய நீர்ப்பாசன அமைச்சர் பதவி விலகவேண்டும். அவரின் இந்த தவறுக்கு நிச்சயமாக ஜம்பர் அணிவிக்கப்படுவார் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளப்பெருக்கில் பதுளை மாவட்டத்தில் வெள்ளையர்கள் அமைத்த பல பாலங்கள் சேதமடைந்துள்ளன. நுவரெலியா - பதுளை பிரதான வீதியை திறக்க முடியாமல் இருக்கிறது. ரயில் சேவைகள் 6 மாதங்களுக்காவது ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் இதனை விளையாட்டாக யாரும் கருதக்கூடாது. அங்கு ஏற்பட்ட மண்சரிவுக்கு யாரையும் குற்றம் சொல்ல முடியாது.

அதேபோன்று 6 மாவட்டங்களில் இருந்து சிகிச்சைக்கு வரும் மஹியங்கனை பிரதான மருத்துவமனை முற்றாக சேதமடைந்திருக்கிறது. அதேபோன்று மஹியங்கனை நீதிமன்றம், பொலிஸ் நிலையம் விகாரை என அனைத்தும் சேதமடைந்துள்ளன. இந்த பொறுப்பிலிருந்து யாருக்கும் தப்பிக்க முடியாது.- என்றார். (எ)

# அரசாங்கத்தை தூக்கி வெள்ளத்தில்...

(07ஆம பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது. அரசாங்கத்தை மக்கள் வெள்ளத்திற்குள் தூக்கியெறிந்து விடுவார்கள் என்ற கற்பனையில் மிதப்பதை விடுத்து கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் நாட்டு மக்களை இடரில் இருந்து மீட்க எதிர்க்கட்சிகள் முழு மையாக ஒத்துழைக்க்க வேண்டும்.

ஆனால், எதிரணி தலைவர்கள் எதிர்பார்ப்பதை விட வும் பெருமளவுக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து அரசாங் கத்துக்கு ஆதரவும் உதவியும் கிடைத்துவருகிறது. தற் போது நடைமுறையில் இருக்கும் கடனுதவித் திட்டத் துக்கு அப்பால் மேலதிகமாக ஆதரவை வழங்குவது குறித்து ஆராய்வதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித் திருக்கிறது. பல்வேறு சர்வதேச நிறுவனங்களும் உதவி களை வழங்குவதாக உறுதியளித்திருக்கின்றன. மீண்டும் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவது என்பது எளிதான பணியாக இருக்கப் போவதில்லை. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, அரசாங்கத்துக்கு ஏற்கெனவே இருந்த சவால்களை இயற்கையின் சீற்றம் மேலும் பல மடங்கு அதிகரித்திருக்கிறது.

இலங்கையின் சமூக - பொருளாதார முன்னேற்றத் துக்கு காலநிலை மாற்றம் தோற்றுவிக்கும் பாரிய ஆபத்தை டித்வா சூறாவளி மீண்டும் நிரூபித்திருக்கிறது. இந்த தடவை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கும் மண்சரிவுகளும் எதிர்பார்க்காத காலநிலை நிகழ்வுகளினால் தொடர்ந்தும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இலங்கை இருக்கி றது என்பதை நினைவுபடுத்தியிருக்கின்றன. பெரும்பா லும் முழுநாடுமே பாதிக்கப்பட்டிருக்கிறது. உயிரிழப் புகளினதும் சொத்து அழிவுகளினதும் உண்மையான பரிமாணம் இனி மேல்தான் தெரியவரும்.

அண்மைய தசாப்தங்களில் கிரமமான முறையில் மாறிமாறி எம்மைத் தாக்கிய வரட்சியும் வெள்ளப்பெருக்கும் காலநிலை மாற்றத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுவரும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்ற அச்சந்தரும் உண்மையை உணர்த்தி நிற்கின்றன. அனர்த்தங்கள் நிகழ்ந்த பின்னர் ஆலோசனைகள் கூறுவதில் அர்த்தமில்லை. அழிவுகள் தான் மிஞ்சும். சம்பவத்துக்கு பிறகு புத்திசாலிகளாக எவரும் தங்களைக் காட்டிக் கொள்வது சுலபம். முன்மதியுடனான நடவடிக்கைகளையே இன்றைய நிலைவரம் வேண்டிநிற்கிறது.

# வீதி விபத்து: ஒருவர் பலி!

மஹியங்கனை, டிசெ. 07

மஹியங்கனை - பதியத்தலாவ வீதியில் உல்ஹிட்டிய பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மஹியங்கனையிலிருந்து பதியத்தலாவ நோக்கி சென்ற லொறி, வீதியை கடக்க முற்பட்ட பாதசாரி மீது மோதியதில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த பாதசாரி தம்பன மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அம்பாறை, தமர்ரத்ன மாவத்தையை சேர்ந்த 62 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.(எ)

# பேரிடர் காலத்தில்...

(08ஆம பக்கத் தொடர்ச்சி)

மாகும். இலங்கை ஒரு பன்முகத்தன்மையும் பல்வகைமையும் கொண்ட நாடு. அதன் பல்வேறுபட்ட சமூகங்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்படும் போதுதான் சிறந்த தீர்வுகள் வந்து சேரும். அரசாங்கம் எதிரணி கட்சிகளை அணுகியிருப்பதும் சிவில் சமூகத் தைச்சந்திப்பதில் காட்டிய நாட்டமும் தனியொரு நிறு வனத்தினால் மாத்திரம் நெருக்கடியைக் கையாள முடி யாது என்ற விளக்கப்பாடும் வேறுபட்ட வகையான அரசியல் சாத்தியம் என்பதற்கான அறிகுறியாகும்.

நாடு இன்று பொருளாதார ரீதியில் வங்குரோத்தானதாக இருக்கலாம். ஆனால், அது தார்மீக அடிப்படையில் வங்குரோத்து அடைந்து விடவில்லை. அனர்த்த முகாமைத்துவக் கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் தரப்படவில்லை என்று குற்றஞ்சாட்டி எதிர்க்கட்சிகள் திங்களன்று பாராளுமன்றத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தன. சூறாவளியின் விளைவான நெருக்கடி ஐக்கிய உணர்வை வேண்டிநிற்கிறது. அந்த உணர்வுக்கு கெடுதி விளைவிப்பதாக கட்சி அரசியல் போட்டி அமைந்துவிடக்கூடாது. அதனால், அரசியல் பிளவின் இரு மருங்கிலும் அரசியல் ஞானம் அவசியமாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மீனவர்களின்...

இடர் நிலைமையையும் கவனத்தில் கொள்ளாது இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக எமது கடற்பரப்புக்குள் பிரவேசித்து எமது கடல் வளங்களைச் சூறையாடிச் செல்கின்றார்கள். இது நியாயமான ஒரு செயற்பாடு அல்ல.

இது குறித்து நாங்கள் பல தடவைகள் பல தரப்புக்களுடனும் பேசிவிட்டோம். ஆனால் ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக இல்லை. மாறாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

தொப்புள் கொடி உறவுகள் என்கிறார்கள். ஆனால் அந்த தொப்புள் கொடி உறவுகளின் வளங்களை அள்ளிச் செல்வது சரியானதா?

தமிழக முதல்வர் ஸ்டாலின் இந்த விடயத்தில் பொறுப்புடன் நடந்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி இந்த விடயத்தில் அதிக அக்கறை செலுத்தி எமது கடல் வளம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய தமிழக அரசுடன் பேசவேண்டும்.

இவ்வாறு இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடரும் பட்சத்தில் அதனைத் தடுப்பதற்கு எமது மீனவர்களும், அமைச்சும் இணைந்து விசேட 'ஒப்பரேசன்' ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்-என்றார். (அ)

(கடற்றொழில் அமைச்சரின் முழுமையான செவ்வி இன்று இரவு 7 மணிக்கு டான் தொலைக்காட்சியில்)

## டித்வா...

அதன்படி, நவம்பர் 26 ஆம் திகதி வரை டித்வா சூறாவளியால் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதைக் குறிக்கும் வானிலை அறிக்கைகள் தொடர்பான அனைத்து தகவல்களும் வழக்கம் போல் இலங்கையுடன் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை...

ஆகியோர் தலைமை யிலேயே இது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

அவசரகால சூழ்நிலையின்போது வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் உதவிக்காகவும் அனைத்து இராஜதந்திரத் தூதரகங்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் ஏனைய கூட்டாளர்களுக்கு பிரதமர் அமரசூரிய இதன் போது நன்றி தெரிவித்தார்.

இலங்கை இப்போது அவசரகால பதிலளிப்பு கட்டத்திலிருந்து, மீட்பு மற்றும் மறுசீரமைப்பு கட்டத்திற்கு நகர்ந்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

சமூகங்கள் விரைவில் நிலைபேறான தன்மைக்கு திரும்புவதை உறுதி செய்வதற்காக பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் மின்சாரம், நீர் வழங்கல், போக்குவரத்து இணைப்புகள், சுகாதார வசதிகள் மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை முழுமையாக மீட்டெடுப்பது அரசாங்கத்தின் உடனடி முன்னுரிமைகளில் உள்ளடங்கும் என்று அவர் வலியுறுத்தினார்.

அபிவிருத்திக் கூட்டாளர்களின் உதவியுடன் விரிவான தேவைகளுக்கான மதிப்பீடு நடத்தப்பட்டு வருவதாகவும், அதன் முடிவுகள் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்களை வழிநடத்தும் என்றும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நேரத்தில் சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கக்கூடிய வலுவான ஆதரவானது, நாட்டை உல்லாசப் பயணத்தின் தளமாகத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்படுவதற்காகவே என்று சுற்றுலாத் துறை பங்குதாரர்கள் வலியுறுத்தியதுடன், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு, அடிப்படைத்தளத்தில் ஏற்படும் முன்னேற்றங்களுக்கு ஏற்ப பயண ஆலோசனைகளை தொடர்ந்து மதிப்பாய்வு செய்வதை ஊக்குவிக்குமாறு இராஜதந்திரச் சமூகத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

அமர்வில் கலந்து கொண்ட இராஜதந்திரப் சமூகம் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் இலங்கையுடனான தங்கள் ஒற்றுமையை மீண்டும் உறுதிப்படுத்தியதுடன், நாட்டின் மீட்சி மற்றும் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு உதவுவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் மற்றும் திட்டமிடப்பட்ட ஆதரவு நடவடிக்கைகள் குறித்து விளக்கினர். (அ)

## இலங்கைக்கு...

இலங்கை மக்கள் இந்த துயரில் இருந்து மீண்டு வரும் வகையில், தமிழக அரசு துணை நிற்கும் என்றும், துயருறும் மக்களுக்கு உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்களை வழங்கிட அதிகாரிகள் குழுவை அமைக்கிறோம் என்றும், அவர்கள் மீண்டெழுந்திடத் துணை நிற்போம் என்றும் தமிழக முதலமைச்சர் கூறியிருந்தார்.

இதேவேளை புயலால் உயிரிழந்தவர்களுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது அனுதாபத்தையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், சென்னை துறைமுகத்தில் இருந்து நேற்று நிவாரணப் பொருட்களை சுமந்து செல்லும் கப்பலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து அனுப்பி வைத்தார். (அ)

# வீடு மறுசீரமைப்புக்கான இழப்பீடுகளை பெறுவதற்கு விண்ணப்ப படிவம் வெளியீடு

கொழும்பு, டிசெ. 07

டித்வா புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வீடு மறுசீரமைப்புக்கான இழப்பீடுகளை பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் தேசிய அனர்த்த சேவைகள் நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குறித்த விண்ணப்பப் படிவத்தை முறையாக பூர்த்தி செய்து உரிய அதிகாரிகளிடம் ஒப்படைப்பதன் மூலம் மாவட்ட ரீதியாக வீடு மறுசீரமைப்பதற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## டித்வா புயலால்...

மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள்,யாரும் வந்து தம்மை பார்த்து பாதிப்புகள் தொடர்பாக கேட்கவில்லை என்றும் எந்த ஒரு நிவாரணங்களும் தரவில்லை என்றும் புயலின் பின்னர் நாங்கள் அரசால் கைவிடப்பட்டுள்ளது போல் உணர்கிறோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

ஒவ்வொரு நாளும் தொழிலுக்குச் சென்றால் மட்டுமே எங்களுக்கு சாப்பாடு. இனி ஒரு மாதத்துக்கு கடலில் தொழிலுக்குச் செல்ல இயலாத நிலையில் உள்ளோம்.

எந்தவொரு அரச நிறுவனம், அமைச்சர்கள், ஆளுநர், அதிகாரிகள் எம்மை வந்து சந்திக்கவும் இல்லை. எங்களுடைய குறைகளை கேட்கவும் இல்லை. அன்றாட உணவுக்கு பெரும் சிரமப்படும் நிலையில் எமது மீனவர்கள் இருக்கிறார்கள்.

கடந்த புயல், வெள்ளத்தின்போது எமது படகுகளை கொண்டு சென்று பலரைக் காப்பாற்றிய எம்மை காப்பாற்றுவதற்கு எவரும் இல்லை.

எனவே அரசாங்கம் இதைக் கருத்தில் கொண்டு எமது மக்களுக்கு நிவாரணத்தை விரைவாக கொடுக்க வேண்டும்-என்றார். (அ)

## அரச...

பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரையில் விடுமுறைக்கான அனுமதியைப் பெற்று, அந்த விடுமுறையைக் கழிக்கத் தயாராக இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு, அங்கீகரிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்கு அமைய விடுமுறையைப் பெற்றுக்கொள்ளும் சாத்தியம் உள்ளதாக பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாட்டு விடுமுறையைப் பெற்றுக்கொள்வதற்காக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள, அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்த புதிய விடுமுறை விண்ணப்பங்கள் மற்றும் விடுமுறை நீடிப்பு விண்ணப்பங்களுக்குப் புதிய சுற்றறிக்கையினால் பாதிப்பு ஏற்படாது. அதேவேளை தேவைகளைப் பூர்த்தி செய்யாத மற்றும் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்களில் குறைபாடுகள் உள்ள விடுமுறை விண்ணப்பங்கள் மீள்பரிசீலனை இன்றி நிராகரிக்கப்படும் என சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் உள்நாட்டு விடுமுறைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடுமுறை விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள புதிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

## மக்களுக்கு...

அரசாங்கமாகும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைய நாட்களில் உதவித்தொகை வழங்கல் தொடர்பில் முன்வைக்கப்படும் பல்வேறு கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பகிரப்படும் தகவல்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்திய ஆளுநர், இது குறித்து நேற்று விசேட தெளிவுபடுத்தலை வெளியிட்டார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

ஜனநாயகக் கட்டமைப்பில் அரச செயற்பாடுகள் குறித்து கேள்விகள் எழுப்பப்படுவதையும், விழிப்புடன் இருப்பதையும் நாம் வரவேற்கின்றோம். ஆனால், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நிற்கும் மக்கள் மத்தியில், உண்மைக்குப் புறம்பான தகவல்களைப் பரப்பி குழப்பத்தை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பது சமூகப் பொறுப்புள்ள அனைவரதும் கடமையாகும்.

உதவித்தொகை வழங்கல் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளருடன் விரிவாகக் கலந்துரையாடினேன். அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமையவே பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் கிராமமட்ட ஏனைய அலுவலர்கள் ஊடாகத் தெரிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் எவ்வித இரகசியத் தன்மையும் இல்லை. உதவித்தொகை பெறத் தகுதியானவர்களின் பெயர்ப்பட்டியல் அந்தந்தப் பகுதிகளில் பகிரங்கமாகத் காட்சிப்படுத்தப்படும். இதனை மாவட்டச் செயலாளரும் உறுதிப்படுத்தியுள்ளார். எனவே, தகுதியான எவரும் விடுபடவோ, தகுதியற்ற எவரும் உள்நுழைவதற்கோ இதில் வாய்ப்புகள் இல்லை.

மிக முக்கியமாக, மக்களுக்கான உதவித்தொகை இன்னமும் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படவில்லை. அவ்வாறு பணம் வைப்பிலிடப்படும் முன்னரே, 'முறைகேடுகள் நடந்துவிட்டதாக' அரைகுறைத் தகவல்களைக் கொண்டு பரப்பப்படும் செய்திகள் அடிப்படையற்றவை. தெரிவுப் பட்டியல்கள் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னரே கொடுப்பனவுகள் இடம்பெறும் என்பதால், பொதுமக்கள் தேவையற்ற வதந்திகளை நம்பி அச்சமடையத் தேவையில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான இந்த அரசாங்கத்தின் பிரதான இலக்கு, அரச இயந்திரத்தில் புரையோடிப்போயிருந்த ஊழலை ஒழிப்பதேயாகும். எனவே, மக்களின் கண்ணீரில் இலாபம் தேடும் ஈனச் செயலுக்கோ அல்லது முறைகேடுகளுக்கோ இனி இடமில்லை.

நிவாரணப் பணிகளில் ஈடுபடும் எந்தவொரு அதிகாரியாவது - அவர் எந்த நிலையிலிருந்தாலும் - தவறிழைத்தாலோ, ஊழலில் ஈடுபட்டாலோ அல்லது பாரபட்சம் காட்டினாலோ அவருக்கு எதிராகக் கடுமையான சட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதில் எவ்வித சமரசமும் இல்லை.

சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் உறுதிப்படுத்தப்படாத தகவல்களைக் கடந்து, முறைகேடுகள் தொடர்பில் யாரிடமேனும் தகுந்த ஆதாரங்கள் இருப்பின், அதனை எனது கவனத்துக்கு நேரடியாகக் கொண்டு வரலாம். ஆதாரபூர்வமான முறைப்பாடுகள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச இயந்திரம் மக்களுக்காகவே இயங்குகிறது. இந்த இக்கட்டான நேரத்தில், காழ்ப்புணர்ச்சிகளைத் தவிர்த்து, நேர்மையுடனும் மனிதாபிமானத்துடனும் ஒன்றிணைந்து எமது மக்களை மீட்டெடுப்போம், என வடக்கு மாகாண ஆளுநர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## கிளிநொச்சி...

சேதமடைந்த பாலங்களை புனரமைத்து வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று பிற்கல் கிளிநொச்சிக்கு வருகை தந்த இந்திய இராணுவ பொறியியல் குழுவினர், புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்துள்ளனனர். (அ)

## சுவிற்சர்லாந்தின்...

இந்த விமானம் சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரில் இருந்து இலங்கையை வந்தடைந்துள்ளது.

இந்த நிவாரணப் பொருட்களை உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்ளும் நிகழ்வில், இலங்கையில் உள்ள சுவிற்சர்லாந்து பிரதித் தூதுவர் ஒலிவியர் பிராஸ் கலந்துகொண்டார். (அ)

## உயிரிழந்தவர்கள்...

மதியம் வெளியிட்ட அறிக்கையின் படி,

அனர்த்தங்களால் 213 பேர் காணாமல் போயுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலவிய சீரற்ற வானிலையால் நாட்டின் 25 மாவட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 576,626 குடும்பங்களைச் சேர்ந்த 2,054,535 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 33,622 குடும்பங்களைச் சேர்ந்த 114,126 பேர் 956 பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 4,309 வீடுகள் முழுமையாகவும், 69,635 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இயற்கை இடரால் மன்னாரில் மட்டும் 26 ஆயிரம் கால்நடைகள் உயிரிழப்பு!

## அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தகவல்

மன்னார், டிசெ. 07

இயற்கை அனர்த்தம் காரணமாக வடக்கு மாகாணத்தில் மிக அதிக பாதிப்பை எதிர்கொண்ட மன்னார் மாவட்டத்தில் 26 ஆயிரத்து 12 கால் நடைகள் உயிரிழந்துள்ளன என்று மாவட்ட அனர்த்த முகாமைத் துவப் பிரிவு உறுதி செய்துள்ளது.

40 வருட வரலாற்றில் முன்னெப் போதும் கண்டிராத வெள்ளப் பாதிப்பை எதிர்கொண்ட மன்னார் மாவட்டத்தில் ஒட்டுமொத்த மக்களும் பாதிப்படைந்துள்ளனர்.


இதேபோன்று மாவட்டத்தின் பொருளாதாரமாக விளங்கும் விவ சாயம், கால்நடை ஆகிய இரு துறை களும் அழிவடைந்துள்ளன.

இதில் 16 ஆயிரத்து 386 மாடு களும், 9 ஆயிரத்து 628 ஆடுகளும் என மொத்தம் 26 ஆயிரத்து 12 கால்நடைகள் அழிவடைந்துள்ள மையை மாவட்ட அனர்த்த முகாத் துவப் பிரிவு உறுதி செய்துள்ளது.

இந்தக் கால்நடைகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக 31 ஆயிரத்து 264 கோழிகளும் வெள் ளத்தில் அகப்பட்டு அள்ளுண்டும், உயிரிழந்தும் உள்ளன எனக் கணக் கிடப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த கால் நடைகள், கோழிகள் என்பனவற் றுடன் அவற்றின் தங்குமிடங்கள், பண்ணைகள் மட்டுமன்றி அவற் றுக்கான தீவனங்களும் வெள்ளத் தில் அடித்துச் செல்லப்பட்டமை யால் மன்னார் மாவட்டத்துக்கு ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிக பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. (அ)

# மல்வத்து மகாநாயக தேரரை சந்தித்தார் ஜனாதிபதி அநுர!



கொழும்பு, டிசெ. 06

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்று முற் பகல், மல்வத்து மகா விகாரைக்கு விஜயம் செய்து மல்வ த்து மகாநாயக தேரர் திப்பட்டுவாவே சிறீ சுமங்கல தேரரை சந்தித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அனர்த்த நிலைமை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க, அரசாங் கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து, ஜனாதி பதி, மல்வத்து மகாநாயக தேரரிடம் விளக்கமளித்த துடன் சிறு உரையாடலிலும் ஈடுபட்டார். (அ)

# இடரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நிலைமைகளை ஆராய்ந்தார் ஆளுநர்

முல்லைத்தீவு, டிசெ. 06

வடக்கு மாகாண கௌரவ ஆளு நர் நா.வேதநாயகன், அண்மையில் ஏற்பட்ட பேரிடரால் பாதிக்கப்ப ட்ட பிரதேசங்களைப் பார்வையிடு வதற்கும், 'தூய்மை இலங்கை' செய ற்றிட்டத்தின் கீழான நடமாடும் சேவையில் கலந்து கொள்வதற்கும் நேற்று முன் தினம் வெள்ளிக்கி ழமை முல்லைத்தீவு மாவட்டத்துக் குப் பயணம் மேற்கொண்டார்.

உள்ளநாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, தூய்மை இலங்கை செயலகம், மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் ஆகியவற் றின் ஏற்பாட்டில், 'தூய்மை இலங்கை - ஒருங்கிணைந்த மற்றும் நிலைத்த நாடு' என்ற தேசிய திட் டத்துக்கு அமைய ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு மற்றும் கரை துறைப்பற்று ஆகிய பிரதேச செய லர் பிரிவுகளில் நடைபெற்ற நடமா டும் சேவைகள் மற்றும் விசேட மக்கள் நலன்புரி வேலைத்திட்டங் களிலும் ஆளுநர் பங்கேற்றார்.

இதன்போது, பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் மற்றும் வீடுகளைத் துப் புரவு செய்வதற்கான அரசாங்கத் தால் வழங்கப்பட்ட காசோலைகள் என்பனவற்றையும் ஆளுநர் வழங்கி வைத்தார். அத்துடன், சமூகசேவை கள் திணைக்களம் ஊடான விசேட உதவிகளும் பொதுமக்களுக்கு ஆளுநரால் கையளிக்கப்பட்டன.

மேலும், பேரிடரால் பாதிக்கப் பட்ட உட்கட்டமைப்புக்களை ஆளுநர் நேரடியாகப் பார்வையி ட்டு ஆய்வு செய்தார். ஒட்டுசுட் டான் - புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் உடைப்பெடுத்த பேராறு பாலம், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் உடனடியாகச் சீர்செய்யப்பட்டு போக்குவரத்து வழமைக்குக் கொண்டுவரப்பட்டிருந்த நிலை யில், ஆளுநர் அதனை நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்துடன், நாயாற்றுப் பாலம் ஊடான தொடர்பு துண்டிக்கப்பட் டதால் மாவட்டத்திலிருந்து தனி மைப்படுத்தப்பட்டுள்ள கொக்கி ளாய் மக்களையும் ஆளுநர் நேரடி யாகச் சென்று சந்தித்து அவர்களது நிலைமைகளைக் கேட்டறிந்தார். (அ)

# டித்வா சூறாவளியால் பெருமளவில் சேதமடைந்த 3 மருத்துவமனைகள்!

கொழும்பு, டிசெ. 07

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவுகளின் போது, சிலாபம் ஆதார மருத்துவமனை, மஹியங் கனை மற்றும் வத்தேகம மருத்துவ மனைகள் ஆகிய மூன்று மருத்துவ மனைகள் பெருமளவில் சேதமடைந் துள்ளன.

அத்துடன், 100 சிறிய மருத்துவ மனைகள் வெள்ளத்தில் பாதிக்கப்பட் டதாக சுகாதார அமைச்சின் செயலா ளர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

டித்வா புயலால் சிலாபம் மருத்து வமனையிலுள்ள சி.டி. ஸ்கான் இயந்தி ரம் உட்பட அனைத்து முக்கிய மருத் துவ உபகரணங்களும் பாதிக்கப்பட் டுள்ளதாக அனில் ஜாசிங்க தெரிவித் துள்ளார். குறித்த மருத்துவமனையில், வெளிநோயாளர் பிரிவுக்கான சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சை மட்டுமே தற்போது மேற்கொள்ளப் படுவதாக அவர் குறிப்பிட்டார்.

சேதங்கள் குறித்து உத்தேச மதிப் பீடு இன்னும் மேற்கொள்ளப்பட வில்லை எனவும் அவர் கூறினார்.

இதனிடையே, உலக சுகாதார ஸ்தாபனம், தேசிய சுகாதார மேம்பாட்டு நிதிக்கு 53 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. (அ)

# நெருக்கடி நிலை குறித்து வதந்திகளைப் பரப்பாதீர்!

## எதிரணியிடம் அரசு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 07

நெருக்கடியான சூழ்நிலையில் போலி தகவல்களைப் பரப்பும் சந்தர்ப்பவாத அரசியலை எதிர்க்கட்சிகள் கைவிட வேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"போலி தகவல்களை பரப்பாமல் இருப்பதுதான் தற்போதைய சூழ்நிலையில் எதிரணிகள் செய்யும் சிறந்த சேவையாக இருக்கும். அதேபோல சந்தர்ப்பவாத அரசியலை கைவிட்டுவிட்டு நாட்டை மீட்க ஒன்றுபட வேண்டும்.

அத்துடன், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்க ளின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற் குரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

ஆபத்தான பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களை அங்கு குடியமர்த்தாமல் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவது பற்றி அவதானம் செலுத்தப்பட்டுள் ளது." எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த கூறினார். (அ)


# இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு டான் ரீவி - டயலொக் இணைந்து உதவி

யாழ்ப்பாணம், டிசெ. 07

வடக்கு மாகாணத்தில் அனர்த் தத்தால் பாதிக்கப் பட்ட குடும்பங் களுக்கு மனிதாபிமான உதவியாக, டான் ரீவியுடன் இணைந்து டய லொக் நிறுவனம் உதவும் கரங்கள் - உலர் உணவு விநியோக திட்ட த்தை முன்னெடுத்துள்ளது.

அதனடிப்படையில் நேற்று மாலை இளவாலை வடமேற்கு சேந்தான்குளம் கிராமத்தில் வெள் ளத்தால் பாதிக்கப்பட்டு, இள வாலை கடற்தொழிலாளர் கூட்டு றச் சங்கம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் 48 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப் பட்டன.

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உடனடி தேவைகளை பூர்த்தி செய் யும் வகையில், அரிசி, பருப்பு, மா உள்ளடங்கலாக அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்கள் அடங் கிய பொதிகள் நேரடியாக மக்களி டம் கையளிக்கப்பட்டன.



இதேவேளை - கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாட சாலையில் தங்கியிருக்கும் குடும் பங்களுக்கும் டான் ரீவியுடன் இணைந்து டயலொக் நிறுவனம் நேற்று உலர் உணவு பொதிகளை வழங்கியுள்ளது. கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் வித்தியால யத்தில் தங்கியிருக்கும் 19 குடும்பங் களுக்கு நேற்று இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (அ)

# சுற்றுலா பகுதிகளுக்கு இடரால் பாதிப்பில்லை

## பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க

கொழும்பு, டிசெ. 07

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் எல்ல சுற்று லாப் பகுதிகளுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்று சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரி வித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பண்டாரவளை, ஹப்புத்தளை, எல்ல, ஹல்துமுல்ல ஆகிய பகுதிகளுக்கு எந்தவொரு பாதிப்புகளும் ஏற்பட வில்லை. வெல்லவாய மற்றும் யால பகுதிகளில் சுற்றுலா நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. நாட்டின் தென் பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகள் எல்ல பகுதிக்கு சென்று வருகின்றனர். எதிர்வரும் பருவக் காலமானது அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் கால மாகும். சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்டி நாட்டின் பொருளாதாரத்தை அதிகரிக்கும் வகையிலான நடவடிக்கைளை முன்னெடுப்பதே தற்போதைய முதன்மை நோக்கமாக காணப்படுகிறது- என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org